பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 10 சனிக்கிழமை 23.01.2021 கதிர் 79

## இ னி து ரகசியம் அல்ல!

இலங்கையின் ஆட்சித் தலைவர்கள் எல்லோரும் மாறி மாறி காதில் பூ வைப் பதற்குப் பொருத்தமான சர்வதேச அமைப்பு ஐ.நா. மனிதஉரிமைகள்கவுன்ஸில்தான் போலும்.

இலங்கையில் மோசமான மனித உரிமை பக்கம்02 ⟫

## மன்னாரில் கொரோனாவால் இரண்டாவது நபர் உயிரிழப்பு

### வடக்கில் மூன்றாவது சாவு பதிவு

மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வீடு திரும்பிய ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவரின் மரணம் மன்னார் மாவட்டத்தில் இரண்டாவது கொரோனா சாவாகப் பதிவாகியுள்ளது. அத்துடன், வடக்கு மாகாணத்தில் கொரோனா நோயால் உயிரிழந்த மூன்றாவது நபர் இவராவார்.

மன்னார் ☞2

## நேற்றும் 787 பேருக்கு 'கொரோனா' மொத்தப் பாதிப்பு 56 ஆயிரத்து 863

கொழும்பு, ஜன. 23

இலங்கையில் நேற்றும் 787 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 56 ஆயிரத்து 863 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 48 ஆயிரத்து 617 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 7 ஆயிரத்து 968 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# வடக்கில் அதிகரிக்கும் 'கொரோனா' நேற்று மட்டும் 50 பேருக்குத் தொற்று



★ வவுனியாவில் - 26 ★மன்னாரில் - 23 ★யாழ்ப்பாணத்தில் - 01

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி. 23

வடக்கு மாகாணத்தில் நேற்று 50 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். ☞2

## சபையில் சுயாதீனமாகச் செயற்பட ஆளுங்கட்சி பிரபல எம்.பி. முடிவு?

ராஜபக்ஷ அரசில் அங்கம் வகிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கான தீர்மானத்தை எடுக்கவுள்ளார் எனத் தகவல்கள் பரவி வருகின்றன.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் தற்சமயம் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருடன் நெருக்கமாகக் கலந்துரையாடியுள்ளார் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்குள் இவ்வாறு இருவரும் கலந்துரையாடியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் ☞2

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்!



கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனத்திடம் கையளிக்கும் முயற்சிகளுக்கு ☞2

### தடுப்புப் பாணி அருந்திய

## சுகாதார அமைச்சர் பவித்ராவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி



சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பிரபல சிங்கள இணையத்தளமான 'மவ்ரட்ட' நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளது.

பவித்ரா வன்னியாராச்சி தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## 278 ஆக உயர்ந்தது கொரோனாச் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் இருவர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 278 ஆக அதிகரித்துள்ளது. ☞2

## இந்தத் தடவை 2,500 பேருக்கு யாழ் பல்கலையில் பட்டமளிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம்,25 ஆம் திகதிகளில் கொரோனா சூழ்நிலைகளுக்கு அமைவாக புதிய ஒழுங்குடன் இடம்பெறவுள்ளது.

வழமையாக 1,500 மாணவர்கள் வரையில் தான் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுவார்கள். ஆனால் இம்முறை அதற்கு முற்றிலும் மாறாக 2,500 மாணவர்கள் வரையில் பட்டம் பெறவுள்ளனர். கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் இந்த பட்டமளிப்பு விழாவை நடத்தி முடிப்பது ☞2

## வெறி பிடித்த இனவாதிகளினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### கோட்டாவுக்குப் பிரபல தேரர்கள் எச்சரிக்கைக் கடிதம்



இனவாத சிந்தனை கொண்ட சிலர் அரச பாதுகாப்புப் பொறிமுறையில் திரைமறைவில் செயற்பட்டு வருகின்றனர் என்று முன்னணி பௌத்த தேரர்கள் 12 பேர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் மூலம் எச்சரித்துள்ளனர்.

இதன் காரணமாக தேசிய பாதுகாப்பு மற்றும் நீதித்துறைக்கு மிகப்பெரிய ☞2

## கச்சதீவு செல்லும் போராட்டத்தை தள்ளிவைத்தனர் தமிழக மீனவர்கள்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.23

கறுப்புக் கொடி கட்டிய படகுகளுடன் கச்சதீவு நோக்கி இன்று பயணிக்கும் தமிழக மீனவர்கள் போராட்டம், நெடுந்தீவு அருகே மரணமான தமிழக மீனவர்களின் சடலங்கள் ☞2

## மற்றுமொரு பகுதியில் நிலநடுக்கம்

பதுளை - மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எக்கிரிய கிராமத்தில் நேற்று அதிகாலை சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

கண்டியில் ஏற்பட்ட நிலநடுக்கங்களை விட சற்றுப் பலம் வாய்ந்ததாக இந்த நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மீறல்களுக்கு – யுத்தக் குற்றங்களுக்கு – மனிதாபிமானத்துக்கு எதிரான கொடூரங்களுக்கு – இனச் சுத்திகரிப்பு மற்றும் இன வழிப்புக்கு – பிரதான சூத்திரதாரி என்று கருதப்படும் பிரமுகரே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் காதில் இலகுவாகப் பூச்சுற்றலாம் என்பது போலத் தான் தோன்றுகின்றது.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் பொறுப்புக் கூறல் விடயங்கள் குறித்தும் ஆராய்ந்த பல்வேறு ஆணைக்குழுக்கள் மற்றும் கட்டமைப்புக்கள் இதுவரை சமர்ப்பித்த அறிக்கைகளை மீண்டும் பரிசீலிப்பதற்காக மூவரடங்கிய ஆணைக் குழு ஒன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்டதான செய்தியைப் பார்த்தபோது இதுதான் எனக்குத் தோன்றியது.

அது மாத்திரம் அல்ல. அண்மைக்கால சினிமா நகைச்சுவைக் காட்சி ஒன்றும் நினைவுக்கு வந்தது. படத்தின் பெயர் – *'வேலைன்னு வந்துட்டா வெள்ளைக் காரன்'.* நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் தோன்றும் காட்சி. எந்த விடயத்தையும் ஆரம்பத்தில் இருந்து ஒழுங்கு முறையாகத்தான் எம்.எல். ஏயான அவரால் உரைக்க முடியும். இடையில் யாரும் குறுக்கிட்டு விட்டால், மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தான் கதையை ஆரம்பிப்பார். *"அன்னைக்கு காலைல ஆறு மணியிருக்கும்... கோழி கொக்கொரக்கோன்னு கூவிச்சிது... என் பொண்டாட்டி குளிச்சிட்டு தலைநிறைய பூ வைச்சிட்டு என்னை வந்து உசுப்பினா...."* – என்று தொடங்கி ஓடரில் (வரிசையில்) மீளமீளத் திரும்பத் திரும்ப அவர் கூறுவதை கேட்டு சிரிக்காத ரசிகர் இருக்கமாட்டார்.

அப்படித்தான் நடந்ததை எல்லாம் மறந்து விட்டு – யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கடந்த பின்னர் – திரும்பவும் ஆரம்பத்திலிருந்து *'அன்னைக்குக் காலைல ஆறு மணியிருக்கும்...!'* என்று ரோபோ சங்கர் போல ஆரம்பத்திலிருந்து ஆலாபனையை ஆரம்பிப்பது போல காட்டுகின்றார் கோட்டாபய ராஜபக்ஷ. ஏதோ சர்வதேச நாடுகளையும், இராஜதந்திரிகளையும் ரோபோ சங்கரின் நகைச்சுவையைக் கேட்டு மகிழக் கூடிய ரசிகர்கள் மாதிரி என்று எண்ணுகின்றார் போலும் ஜனாதிபதி கோட்டாபய. அதனால்தான் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனிவாக் கூட்டத் தொடர் என்றதும் இப்படி ஒரு கயிற்றை அவிழ்த்து விட்டிருக்கின்றார் அவர்.

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக தருஸ்மன் குழு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நியமித்த நிபுணர் குழு, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற பல்வேறு தரப்புகள் சமர்ப்பித்த அறிக்கைகளை ஆராய்ந்து, அவை குறித்து விசாரிப்பதற்கு ஏதேனும் பொறிமுறை அவசியமா என்று பரிந்துரைக்குமாம் – ஜனாதிபதி கோட்டாபய தற்போது நியமித்துள்ள ஆணைக்குழு.

அதாவது, யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற கொடூரங்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டுமா என்பது குறித்து *'அன்னைக்கு காலைல ஆறு மணியிருக்கும்...'* என்ற மாதிரி ஆரம்பத்தில் இருந்து தொடங்க உத்தரவிட்டிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய.

இந்தக் கதை மூலம் – அதைத் தொடர்வதன் மூலம் – தன்னுடைய எஞ்சிய நான்கு ஆண்டு ஆட்சிக் காலத்தையும் சமாளித்து, ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலை 'பேய்க்காட்டி' சமாளித்து விடலாம் என்பது கோட்டாவின் எண்ணம்.

இந்தப் பேய்க்காட்டலுக்கு அவர் நியமித்திருக்கும் ஆணைக்குழுவும் அதன் தலைவரும் கனகச்சிதமாகப் பொருந்தியிருப்பது அடுத்த விடயம்.

அந்த ஆணைக்குழுவின் தலைவர் எச்.எம்.எம்.நவாஸ். உயர் நீதிமன்ற நீதியரசர் என்ற அரணை அமைத்து அதற்குப் பின்னால் பாதுகாப்பாக நிற்பவர். அவர் தொடர்பில் உண்மைகளை என் பேனா எழுதத் தொடங்கினால், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு முன்னிலையான மாதிரி எனக்காகவும் முன்னிலையாகுங்கள் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனிடம் நான் கோர வேண்டியிருக்கும். அதனால் என் பேனாவைக் கொஞ்சம் கட்டுப்படுத்தி, சுயதணிக்கை செய்து கொள்கின்றேன்.

ஆட்சியாளர்கள், நீதித்துறைக்குள் ஊடுருவ கால்கோள் இடுபவர்களை இது போன்ற ஆணைக்குழு நியமனங்கள் மூலம் தாங்களே காட்டிக் கொடுத்து விடுவது வழமையே.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சட்டமா அதிபராகவும் பின்னர் சர்ச்சைக்குரிய பிரதம நீதியரசராகவும் இருந்தவர் மொஹான் பீரிஸ். அவரின் வலது கைதான் இப்போது மேற்படி ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரும் ஏற்கனவே மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில இலங்கைத் தரப்பைக் காப்பாற்ற இலங்கை அணியில் இடம்பெற்று ஜெனிவா சென்றவர்தான்.

அதேபோல, விடுதலைப் புலிகளின் காலத்தில் புலிகளுடன் ஜெனிவாவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுகளில் இலங்கை அணியில் இடம்பெற்ற அப்போதைய பொலிஸ்மா அதிபர் சந்திரானந்த டி சில்வாவும் இப்போதைய ஆணைக் குழுவில் இடம் பெற்றுள்ளார்.

நல்ல ஆணைக்குழு... – கண்துடைப்பு நாடகத்துக்கு...!

– மின்னல் –

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எதிராகத் துறைமுக தொழிற்சங்கங்களால் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

புறக்கோட்டையிலிருந்து கோட்டையில் அமைந்துள்ள துறைமுகங்கள் அமைச்சு வரையில் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

துறைமுகத் தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்துகொண்டது.

துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டுக்கு வழங்கும் திட்டத்தை அரசு கைவிடும் வரையில் தமது போராட்டம் தொடரும் என்று துறைமுக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

## 278 ஆக உயர்ந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆண் ஒருவரும், பெண் ஒருவருமே இறுதியாக உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு – 08 ஐச் சேர்ந்த 82 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நிலையில், பின்னர் கொழும்பு தேசிய தொற்றுநோயியல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம பகுதியைச் சேர்ந்த 51 வயதான பெண் ஒருவர் கொரோனாத் தொற்றாளராக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்ட நிலையில் அங்கிருந்து ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கொரோனாவால் இதுவரை 278 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களில் 265 பேர் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சிலாவத்துறையைச் சேர்ந்த 63 வயதுடைய இஸ்லாமியரே இவ்வாறு உயிரிழந்தார்.

அவர் நாள்பட்ட நோயால் பாதிப்பட்ட நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் கடந்த சில நாள்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் வீடு திரும்பியிருந்தார்.

அவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். அவரது மாதிரிகள் நேற்று எடுக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் ஜனாஸா மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## சபையில் சுயாதீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் எந்தக் காரணத்துக்காகச் சுயாதீனமாகச் செயற்படவுள்ளார் என்கின்ற தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

## கச்சதீவு செல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இன்று தமிழகம் கொண்டு வரப்படுவதனால் ஒத்தி வைக்கப்பட்டதாக தமிழக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மத்திய மீன்வளத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் கிரிராஜ் சிங் ராமேஸ்வரத்திற்கு பயணித்து மீனவ சங்கத் தலைவர்களு டனும் இராமேஸ்வரம் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.

"பிரதமர் ஊடாக இப்பிரச்சினைக்கு உடன் பேசி தீர்வு எட்டப்படும். இச்சம்பவத்துக்கு எமது கடும் கண்டனத்தை தெரிவிப்பதோடு இனிமேல் இவ்வாறு இடம்பெறாமல் பார்த்துக்கொள்வோம். – என்று அமைச்சர் கிரிராஜ் சிங், மீனவ அமைப்புக் களிடம் தெரிவித்தார் என இப் பேச்சுகளில் கலந்துகொண்ட இராமேஸ்வரம் மீனவ சங்கத் தலைவர் யேசுராஜா தெரிவித்தார்.

இப் பேச்சின் அடிப்படையில் நாளை (இன்று) கச்சதீவு நோக்கிப் பயணிக்கும் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இருப்பினும் திட்டமிட்டபடி 24 ஆம் திகதி (ஞாயிறு) முதல் 4 மீனவர்கள் இறப்புக்கு நீதி கேட்டு தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் . இதில்

இலங்கை கடற்படை மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும், தற்போதும் இலங்கை சிறையில் இருக்கும் மீனவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும், இனிமேல் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாது என்று உத்தரவாதப் படுத்த வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நாளை மறுதினம் முதல் (நாளை முதல்) மீண்டும் உண்ணாவிரப் போராட்டம் இடம்பெறும். – என்றார்.

இதேநேரம் இலங்கை கடற்படையினரால் நேற்று இரவு காங்கேசன்துறை ஊடாக எடுத்துச் செல்லப்பட்ட நான்கு மீனவர்களின் உடல்களும் இந்தியாவின் ஆதித்யா கப்பலிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் கப்பலில் இருந்து படகிற்கு மாற்றம் செய்யப்பட்டு, இன்று மாலை 2 மணியளவில் தமிழகம் கரையை அடையும் எனத் தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் தி.மு.கவின் எம்.பி. கனிமொழி இன்று ராமேஸ்வரம் செல்லுகின்றார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மற்றுமொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்று புவிச்சரிதவியல் ஆய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3.30 தொடக்கம் 4 மணிவரையில் மூன்று தடவை நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன.

சுமார் மூன்று செக்கன்களுக்கு உணரப்பட்டுள்ள இந்த நிலநடுக்கங்கள் காரணமாக அப்பிரதேச மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த நிலநடுக்கங்கள் காரணமாக பாதிப்புகள் ஏதும் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

## வடக்கில் அதிகரிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மன்னாரைச் சேர்ந்த 23 பேருக்கும், வவுனியாவைச் சேர்ந்த 6 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் சங்கானையைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் புத்தளம் சாலையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்ட நிலையில் அங்கு பணியாற்றும் சங்கானையைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் வீடு திரும்பினார்.

அவர் சுயதனிமைப்படுத்தப்பட்ட நிலையில் மாதிரிகள் பெறப்பட்டு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன்போது அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அறிக்கை கிடைத்துள்ளது.

அத்துடன், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வவுனியா நகர கொத்தணியுடன் தொடர்புடைய 154 பேரின் மாதிரிகள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவர்களில் 20 பேருக்குத் தொற்று உள்ளமை நேற்றைய பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

## வெறி பிடித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அச்சறுத்தல் ஏற்படுகின்றது எனவும் அந்தக் கடிதத்தில் தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதி அமைச்சர் அலி சப்ரியால் ஜனாதிபதிக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய, பொலிஸ் திணைக்களத்துக்கு சட்டத்தரணிகள் 150 பேரை பொலிஸ் பரிசோதகர்களாக இணைத்துக்கொள்ளும் யோசனை விவகாரத்தில் தமிழ்மொழிக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுவது விடயத்தில் ஜனாதிபதி அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று குறித்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் என்பது அரசமைப்பு முரண் மற்றும் துரோகச் செயற்பாடாகும் என்று குறிப்பிட்டுள்ள தேரர்கள், அதனை அனுமதிக்க வேண்டாம் என்கிற கோரிக்கையையும் முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் எல்லே குணவங்ச, பெங்கமுவே நாலக்க, முருந்தெட்டுவே ஆனந்த, ஓமாரே கஸ்ஸப்ப, அதபத்துகந்தே ஆனந்த உள்ளிட்ட பிரபல தேரர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

## சுகாதார அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கேகாலை ஆயுர்வேத மருத்துவரினால் கொரோனாத் தொற்றுக்கான மூலிகை மருந்து எனக் கூறப்பட்ட பாணியை, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அண்மையில் அருந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தத் தடவை 2, 500...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மிகவும் சிரமமானது. எனினும் மருத்து- வர்கள், சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதலுக்கு அமையவே புதிய ஒழுங்கு நடைமுறைகளுடன் இந்தப் பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

வழமையாகப் பட்டமளிப்பு விழா இடம்பெறும் கைலாசபதி அரங்கில் இம்முறை பட்டமளிப்பு விழா இடம்பெறாது. மாறாக, புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள உள்ளக விளையாட்டரங்கில் தான் 35 ஆவது பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கொரோனா சூழ்நிலையை கருத்தில் கொண்டும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வழமையாக மூன்று நாள்கள் இடம்பெறுகின்ற பட்டமளிப்பு விழா, இம்முறை 02 நாள்களில் நாள் ஒன்றுக்கு 03அமர்வுகள் வீதம் 06 அமர்வுகளில் நடத்தி முடிக்கப்படவுள்ளது. மேலும் பட்டமளிப்பு விழா மண்டபம் மாற்றப்பட்டுள்ளமையினால், மண்டபத்துக்கான நுழைவாயிலாக மருத்துவபீடத்தின் நுழைவாயில் பயன்படுத்தப்படும். – என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# தடுப்பூசிகளைத் தருவிப்பதில் அரசுத் தரப்பு மெத்தனப் போக்கு

## சாடுகின்றார் ரணில்



கொவிட் – 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் தடுப்பூசிகள் தற்காலிகமான தீர்வே தவிர நிரந்தரத் தீர்வு கிடையாது.

எனினும் தடுப்பூசிகள் தொடர்பில் உறுதியான முடிவை அரசாங்கம் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் தடுப்பூசிகளை விரைவில் நாட்டுக்கு எடுத்து வருவதாகக் கூறிக்கொண்டிருக்காது செயல் வடிவில் காண்பிக்க வேண்டும் என ஐக்கியத் தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொவிட் – 19 வைரஸ் தொற்றால் நாட்டு மக்கள் உயிரிழந்து வரும் நிலையில், கட்சி பேதமின்றி அவர்களை காப்பாற்ற வேண்டியது எமது கடமையாகும்.

இந்நிலையில், இந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இன்னமும் அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் எவையுமில்லை.

தற்போது, ஊடகங்கள் மக்கள் மத்தியில் வெறுமனே நம்பிக்கையை மாத்திரமே ஏற்படுத்தி வருகின்றன. கொரோனா தடுப்பூசிகள் நாட்டுக்கு எடுத்துவரப்படும் என்று கூறிவருகின்றன.

ஆனால் தடுப்பூசிகள் எவ்வாறு நாட்டுக்கு எடுத்துவரப்படும். இது தொடர்பில் அரசாங்கம் ஏதாவது ஒரு நாட்டுடனோ அல்லது அமைப்புடனோ ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதா? என்பது தொடர்பில் எந்த ஊடகமும் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்புவதில்லை.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, கொவெக்ஸ் வசதிகள் ஊடாக தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும், இதற்காக 25 ஆயிரம் மில்லியன் டொலர்களைச் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

நாம் அறிந்தவகையில் இதன்போது முழு நாட்டுக்குமே அவசியமான தடுப்பூசிகள் கிடைக்கப்பெறாது, அதற்கமைய, முதற்கட்டமாக 3 சதவீத தடுப்பூசிகளும், இரண்டாவது கட்டமாக 18 சதவீத தடுப்பூசிகளும்தான் கிடைக்கப் பெறவுள்ளன.

இதேவேளை நாம் அதிர்ஷ்டசாலிகள் என்றால் இந்த வருட இறுதிக்குள் இந்த தடுப்பூசிகள் கிடைக்கப்பெறலாம், இல்லை என்றால் எதிர்வரும் வருடம்வரை நாம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இந்நிலையில், வைரஸ் பரவலின் தாக்கம், எதிர்வரும் 3 வருடங்கள் வரை காணப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய இராச்சியம் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தாம் எதிர்பார்த்த இலக்கை அடையமுடியாது என்று தெரிவித்திருக்கின்றது. இந்நிலையில் அரசாங்கத்தால் எவ்வாறு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தமுடியும்.

அதனால், வைரஸ் தொற்றை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் கட்டுப்படுத்த முடியும் என்று போலி நம்பிக்கைகளை ஏற்படுத்தி மக்களை ஏமாற்ற வேண்டாம்.

வைரஸ் பரவல் தொடர்பான உண்மை நிலைவரத்தை நாட்டுக்கு தெரிவிப்பதன் மூலமே, அதிலிருந்து எம்மால் பாதுகாப்புப் பெறமுடியும்.

இதேவேளை வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளின் போது, அதன் பிரதான பொறுப்பை சுகாதார பிரிவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரிடம் கையளிப்பதுடன், ஏனைய பிரிவுகளிலும் சுகாதார துறையைச் சேர்ந்தவர்களே இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். இதுவே தற்போது நாட்டுக்கு அவசியமானதாகும். – என்றார்.

## மக்களிடையே கொரோனா பரவல் வசந்தகாலமாகக் கருதுகிறது அரசு!

கொரோனா வைரஸ் தொற்றை அரசாங்கம், தங்களுக்குக் கிடைக்கப் பெற்ற வசந்தகாலங்களுள் ஒன்றாக எண்ணி செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாலித்த ரங்கே பண்டார குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டிலுள்ள அனைத்து இன மக்களுக்கு ஒன்றாக இணைந்து செயற்படக்கூடிய ஒரு கட்சியாகவே ஐ.தே.க. உருவாக்கப்பட்டது.

அதற்கமைய கட்சியின் ஆரம்பகால தலைவர்களை போன்று, தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கட்சியின் வளர்ச்சிக்காவும், நாட்டுக்காகவும் பெருமளவு உழைத்துள்ளார்.

இந்நிலையில், தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான அரசாங்கமொன்றை மக்கள் எதிர்பார்த்துள்ளனர். எமது இந்த எதிர்கால பயணத்தையும், கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனே நாம் ஆரம்பித்துள்ளோம்.

அதற்கமைய எதிர்வரும் காலங்களில் எமது கட்சியை மேலும் உத்வேகத்துடன் மீளக் கட்டியெழுப்புவதுடன், ஆட்சியையும் கைப்பற்றுவோம்.

தற்போது கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஆனால், அரசாங்கத்தை பொறுத்தமட்டில் வைரஸ் பரவலையும் ஒரு வசந்தகாலமாக எண்ணியே செயற்பட்டு வருகின்றது.

பி.சி.ஆர். பரிசோதனை தொடக்கம், வெளிநாட்டிலுள்ள பணியாளர்களை அழைத்து வருகின்றமை வரையில், அனைத்து வழிகளிலும் பணம் ஈட்டுவதிலே அரசாங்கம் அக்கறைக் கொண்டுள்ளது. அதனால் மக்களின் எண்ணங்களுக்கமைய எமது தலைமையில் புதியதோர் அரசாங்கத்தை உருவாக்குவதற்காக நாம் உறுதியுடன் உழைப்போம்.

## ஹெரோயின் வைத்திருந்த நால்வர் வவுனியாவில் கைது!

வவுனியா ஆசிக்குளம் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நான்கு பேரை வவுனியா பிராந்திய போதைத்தடுப்பு பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்தப்பகுதியில் போதைப்பொருள் பயன்பாடு இடம்பெற்றுவருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலிற்கமைய அந்தப் பகுதியில் சோதனைகளை முன்னெடுத்த பொலிஸார், மூன்று கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டுள்ளனர்.

அதனை உடைமையில் வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அதே பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை வந்த காரணத்தை விளக்கினார் பிரி. செல்வந்தர்!

கடந்த 12 ஆம் திகதி திடீரென இலங்கைக்கு வந்த பிரித்தானியாவின் செல்வந்தரும் ரோத்ஸ்சைல்ட் குடும்ப உறுப்பினருமான நதானியேல் ரோத்ஸ்சைல்ட் தனது இலங்கை விஜயம் தொடர்பாக டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ளார்.

எலக்ரோனிக் உற்பத்தி இடமாக்க இலங்கையின் பொருத்தத்தைப் பற்றி அறிய இந்த பயணத்தை முடித்தேன்.

அந்த பயணத்திலிருந்து திரும்பிய நான் இலங்கை அரசாங்கத்தையும், கொவிட் -19 தொற்றுநோய்க்கான பதிலையும், நான் சந்தித்த வணிக வாய்ப்புகளையும் கண்டு வியப்படைந்தேன்.

இலங்கை ஒரு சிறந்த எதிர்காலம் கொண்ட 'உண்மையான இரத்தினம்' என அவர் பதிவிட்டார்.

மாலைதீவு சுற்றுப்பயணத்தை முடித்த அவர் சமீபத்தில் தனது ஜெட் விமானத்தில் இலங்கைக்கு வந்தார்.

இவர் சர்வதேச அளவிலான வணிகங்களை வைத்திருக்கிறார்.

இந்த விஜயம் வெளியுறவு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மற்றும் இது வணிக நோக்கங்களுக்காக என்றும் கூறப்படுகிறது.

## ஓட்டோவில் கஞ்சா கடத்தியவர் கைது!

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசத்தில் இருந்து ஆரையம்பதி பாலமுனை பகுதிக்கு ஓட்டோவில் 10 கிலோ கிராம் கஞ்சா கடத்திய ஒருவரை மட்டக்களப்பு பிள்ளையாரடி பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை பகல் போக்குவரத்து பொலிஸார் கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி பிள்ளையாரடி பகுதியில் சம்பவதினமான கடந்த வியாழக்கிழமை போக்குவரத்து பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது ஓட்டோ ஒன்றை நிறுத்தி சோதனையிட்டபோது அதில் அரிசி மற்றும் பலசரக்கு பொருள்களுடன் பிஸ்கட் பெட்டிகளில் பரிசுப்பொருள்கள் போன்று கஞ்சாவை சூட்சகமாக பொதி செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் கைது செய்தனர்.

இதனையடுத்து ஓட்டோ சாரதியை கைது செய்தமையுடன் 10 கிலோ கஞ்சாவை மீட்டுள்ளனர். இது தொடர்பாக விசாரணைகளை மட்டக்களப்புத் தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## புத்தளத்தில் வசிக்கும் வடக்கு வாக்காளர்கள் விண்ணப்பத்தை 29 இற்கு முன் சமர்ப்பிக்கலாம்!

### மஸ்தான் எம்.பி. அறிவிப்பு

வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வசித்து வருகின்ற மக்கள் தமது வாக்காளர் விண்ணப்பப்படிவத்தை இந்த மாதம் 29 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க முடியும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புத்தளத்தில் வசித்து வரும் சுமார் 7 ஆயிரத்து இற்கும் மேற்பட்ட வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தங்களது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக கடந்த 2020 நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிகளில் வாக்களித்தனர்.

தற்போது இவர்களது பெயர்கள் சொந்த மாவட்ட வாக்காளர் பதிவேட்டில் இருந்து இவர்களது விருப்பத்துக்கு மாறாக நீக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரையும், ஆணையாளரையும் நேரில் சென்று சந்தித்து இரண்டு பக்கங்கள் கொண்ட கடிதங்களையும் கையளித்தேன்.

உரிமைக் கோரிக்கை படிவம் விண்ணப்பிக்கும் திகதி முடிவடைந்துள்ள நிலையில் இந்த திகதியை மேலும் பத்து நாள்களுக்கு அதாவது இந்த மாதம் 29 ஆம் திகதி வரை நீடித்து தருமாறு கேட்டிருந்தேன்.

அதற்கமைய தற்போது விண்ணப்பத் திகதி எதிர்வரும் 29 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வசித்து வருகின்ற மக்கள் தமது உரிமை கோரிக்கை படிவத்தை இந்த மாதம் 29 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## இலங்கை அணி கிறிக்கெட் வீரர்களுடன் விளையாடுகின்றது கொரோனா!

ஶ்ரீலங்கா கிரிக்கெட் அணியின் இரண்டு வீரர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான சம்பிக்க கருணாரத்ன மற்றும் பிநுர பெர்னான்டோ ஆகியோருக்கே, கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக ஶ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சம்பிக்க கருணாரத்ன 2019 ஆம் ஆண்டு டெஸ்ட் அந்தஸ்தை பெற்றதுடன், அவர் ஒரு போட்டியில் மாத்திரமே விளையாடியுள்ளார்.

பிநுர பெர்னான்டோ, 3 ரி20 போட்டிகளில் விளையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீனவர் அவலத்தில் அரசியல்

யுத்தத்தில் கூட ஓர் ஒழுங்கு முறைமை உண்டு. விதிமுறைமைகள் உள்ளன. அதனை மீறியமைதான் இன்று இலங்கைப் படைகளுக்கு எதிரான உணர்வலைகளுக்குக் காரணம்.

ஆயுதப் போராட்டங்களில் மட்டுமல்ல, பொதுஜன எழுச்சிப் போராட்டங்களிலும் இதுதான் விதிமுறை. அது அதற்குள்ள தார்மீக நெறிமுறைகள், மனிதாபிமான நடைமுறைகளை மீறி நாம் செயற்பட முடியாது, செயற்படக் கூடாது.

நெருக்கமான – பக்கத்துப் பக்கத்தில் முட்டிக் கொண்டிருக்கின்ற – இலங்கை, இந்திய தேசங்களின் கடல் எல்லைப் பிரிப்பு குறித்து தெளிவான ஏற்பாடுகள், ஒழுங்குகள், விதிமுறைகள் இருந்தாலும் அது மீறப்படுகின்றது. அதனால் நமது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பது உண்மைதான்.

தமிழக மீனவர்களின் அத்துமீறலினால் இலங்கை மீனவர்கள் – குறிப்பாக வடக்கு, கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மீனவர்கள் – நேரடியாகவும் மறைமுகமாகவும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர் என்பது முற்றிலும் உண்மை.

இது விடயத்தில், இலங்கைத் தமிழ் மீனவர்கள் சார்பாக முன்னெடுக்கப்படும் அனைத்து எழுச்சிப் போராட்டங்களிலும் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் ஒன்றுபட்டு – ஒற்றுமைக் குரலில் – முழு அளவில் பங்களித்தே வந்திருக்கின்றது. இலங்கைத் தமிழர் தாயக தேசம் நமது வடக்கு, கிழக்கு மீனவர்களுடனேயே – நமது சொந்தங்களுடனேயே – ஐக்கியப்பட்டு நிற்கின்றது என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

ஆனால் அதற்காக அந்த ஆதரவு தவறான போராட்ட வழி முறைகளுக்கும் உடன்படானது என்று யாரும் கருதி விடக் கூடாது.

மீனவர் சர்ச்சை என்னவோ இரண்டு நாடுகளுக்கு இடைப்பட்டதுதான். ஆனால் சம்பந்தப்பட்ட இரு மீனவர் தரப்புக்களும் பெரும்பாலும் தமிழர்கள்தான். இலங்கையின் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டுகின்றமை போன்று இது தொப்புள் கொடி உறவுகளுக்கு இடைப்பட்ட பிரச்சினை.

அதனால் இதனைக் கையாள்வதில் நிரம்ப நிதானமும், போதுமான பொறுப்புணர்வும், அவசியமான அவதானமும் தேவை. எடுத்தேன், கவிழ்தேன் என்ற மாதிரி யாரும் நடந்து விடமுடியாது. யாருடைய அரசியல் தேவைகளுக்காவும், இலக்குகளுக்காகவும் தமிழர் தரப்பு பலிக்கடாவாகி விடவும் முடியாது; கூடாது.

இந்திய மீனவர் தரப்பில் நான்கு உயிர்கள் பலியாகியிருக்கின்றன. ஒரு ட்ரோலர் படகு நீரில் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றது. உயிரிழந்த இந்திய மீனவர்கள் நால்வரில் ஒருவர் தமிழகத்தில் தஞ்சம் புகுந்த நமது யாழ்ப்பாண மீனவர். இது ஒன்றே இந்தப் பிரச்சினைக்குள் இருக்கும் உணர்வுபூர்வமான ஆழத்தைப் புரிய வைக்கப் போதுமானது.

இலங்கை – தமிழக மீனவர்கள் இடையே பிரச்சினை என்பது உண்மைதான். எல்லை மீறி தவறிழைத்து வருபவர்கள் தமிழக மீனவர்கள் என்ற குற்றச்சாட்டும் சரிதான். ஆனால் சிக்கலில் நான்கு மீனவர்களின் உயிர்கள் பறிபோகியிருக்கின்றன. அது விபத்தா, படுகொலையா என்ற சர்ச்சை நீடிக்கின்றது. பதற்றம் நீடிக்கின்றது.

இன்றைய, நிலையில் இலங்கை மீனவர்களின் தரப்புக்காகச் சட்ட ரீதியாகச் செயற்படுபவர்கள் இலங்கைக் கடற்படையினர் என்பதும் உண்மைதான். ஆனால் அதற்காகக் கண்ணை மூடிக் கொண்டு அவர்கள் இழைக்கும் தவறை நாம் ஆதரிக்க முடியாது. ஆதரிக்கவும் கூடாது.

ஏனென்றால் இதே இலங்கைக் கடற்படையினரின் சீத்துவம் யாது என்பது எங்களுக்கு நன்கு தெரியும். ஆழ்கடலில் மட்டுமல்ல, கிளாலி, கொம்படி, ஊரியானை ஒட்டிய குடாக்கடலில் கூட இவர்கள் என்ன செய்தார்கள் என்ற கோர அனுபவப் பாடம் எமக்குண்டு. இதே கடற்படை இழைத்த கொடூரங்களுக்கும் எங்களுக்கு இன்னும் நீதி கிட்டவில்லை என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

அது மட்டுமல்ல, இன்று மீன்பிடி உரிமைக்காக நாம் முரண்படும் இந்தத் தமிழக மீனவர்கள் யுத்த காலத்தில் இதே இலங்கைக் கடற்படையால் எத்துணை வதைபட்டார்கள், எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள், ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்திலும், அகதிகள் மீட்பிலும் அவர்கள் எத்துணை பங்களித்தார்கள், தமிழர் தாயகம் இலங்கை படைகளால் யுத்த முற்றுகைக்குட்படுத்தப்பட்டு, பொருளாதாரத் தடையால் சுருண்டு கிடந்த போது உயிரைப் பணயம் வைத்து தமிழர் தாயகத்தின் உயிர் மூச்சுக்கு அவர்கள் ஆற்றிய பணி எல்லாம் ஒரே நாளில் மீனவர் முரண்பாட்டுக்காக மறந்து விடக் கூடியவை அல்ல.

அதுவும் இலங்கைக் கடற்படையின் அத்துமீறிய அராஜகமாக அமையக் கூடிய ஒரு குற்றச்சாட்டை மூடி மறைத்து, நாடகம் ஆடுவதற்கோ, கடையடைப்பு என்ற பெயரில் அத்தகைய அராஜக மூடி மறைப்புக்கு துணைபோவதற்கோ தமிழர்கள் இடங்கொடுக்கக்கூடாது.

இந்திய மீனவர்கள் கொல்லப்பட்ட விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர மற்றைய தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஏதோ, ஒளித்துப் பிடித்து விளையாடிப் பம்முகின்றன என்றே தோன்றுகின்றது. இலங்கைத் தமிழ் மீனவர்களின் வாக்குகளை இழந்து விடக்கூடாது என்பதற்காக அவை வாய்மூடி மௌனம் காக்கின்றன என்றே தோன்றுகின்றது.

மீனவர் பிரச்சினைக்கு நீதியான தீர்வு வேண்டும். ஆனால் அந்தத் தீர்வை எட்டுவதற்கு இடையில் அராஜகத்துக்குத் துணை போவதும் தவறுதான். தவறைத் தவறு என்று கூறும் தார்மீகத் தைரியம் இருந்தால்தான் நியாயம் கேட்கும் உரித்தும் எங்களுக்கு இருக்கும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு கூறி வைக்க விரும்புகின்றோம்.

# எது நடக்கக் கூடாதோ அது நடந்திருக்கிறது!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்தொழில் ஈடுபட்டிந்தபோது ஏற்பட்ட துன்பகரமான சம்பவத்தில் சிக்கி, நான்கு இந்தியக் கடற்றொழிலா ளர்கள் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில், நால்வரது சடலங்களும் கிடைத்துள்ளன என்ற செய்தி மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



இவ்வாறான இழப்புக்கள் பலவற்றைக் கடந்தி வந்த அனுபவத்தின் அடிப்படையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரதும் உறவினர்களினதும் உணர்வுகளைப் புரிந்து கொள்கின்றேன். அவர்கள் சூழ்ந்திருக்கும் துன்பக் கடலில் இருந்து அவர்கள் மீண்டு வர வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இலங்கையின் கடற்றொழில் அமைச்சராக பதவியேற்றுக் கொண்டதில் இருந்து, இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு, இலங்கை கடற்றொழிலாளர்களும், எமது உறவுகளான இந்தியக் கடற்றொழிலாளர்களும் பாதிக்கப்படாத வகையில் இரண்டு தரப்பினரும் இணங்கிக் கொள்ளும் வகையிலான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தேன்.

மேலும் அதுதொடர்பான முன்வரைவு ஒன்றைத் தயாரித்திருந்தேன். கடந்த வருடம் ஜனவரி மாதம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டபோது இந்தியப் பிரதமரிடமும் கையளித்திருந்தேன்.

இந்தியத் தரப்பினரும் குறித்த திட்டத்தை வரவேற்றிருந்தனர். எனினும் துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட கொவிட் – 19 காரணமாக அதனை முன்கொண்டு செல்ல முடியவில்லை.

அண்மைக்காலமாக இந்தியக் கடற்றொழிலார்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகள் அதிகரித்திருந்த நிலையில், குறித்த செயற்பாடுகள் தொடரும் பட்சத்தில் இலங்கை – இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு இடையில் கடலில் மோதல் ஏற்பட்டு, விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்பட்டு விடும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தேன். எது நடக்கக் கூடாது என்று விரும்பினேனோ, துரதிர்ஷ்டவசமாக அது இப்போது நடந்திருக்கின்றது.

உயிரிழந்தவர்கள் இந்தியக் கடற்றொழிலாளர்களாக இருப்பினும், அவர்களும் என்னுடைய தொப்புள் கொடி உறவுகள். கடந்த காலங்களில் நாம் துன்பத்தை சுமந்த வேளைகளில் எல்லாம் எமக்காக உரிமையுடன் குரல் கொடுத்தவர்கள். எமக்காகத் துடிப்பதற்கு பாரத தேசம் இருக்கின்றது என்ற நம்பிக்கையை எமக்கும் இன்றும் ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள்.

அவ்வாறானவர்களுக்கு இன்னல் ஏற்படுவதை என்னால் எவ்வாறான சூழலிலும் தாங்கிக் கொள்ள முடியாது. நடைபெற்ற சம்பவம் தொடர்பாக பல்வேறு தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

எனினும், இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடப்பதை தடுக்கும் நோக்கில் உண்மையில் நடந்தது என்ன என்பதை அறிந்து கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையில் மேற்கொண்டுள்ளேன்.

அதேவேளை, உணர்ச்சிவசப்பட்ட முடிவுகள் எந்தளவிற்கு இழப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டவன் என்ற அடிப்படையில், இந்தியக் கடற்றொழிலாளர்களும் இந்தச் சந்தர்ப்பத்தில் உணர்ச்சி வசப்படாது புத்திசாதுரியமாக எதிர்கால நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்

எவ்வாறிருப்பினும், இவ்வாறான சம்பவங்கள் முழுமையாக தடுக்கப்பட வேண்டுமாயின் இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினை நிரந்தமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



யாழ். நீரிழிவுக் கழகத்தினரால் அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு நீரிழிவு பரிசோதனை, இரத்தப் பரிசோதனை BMI உடற்திணிவு சுட்டி ஆகியவற்றை பரிசோதிக்கும் மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டு நீரிழிவு தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வும் நடத்தப்பட்டது.

## இலங்கை பங்குச்சந்தை திடீரென அதிகரிப்பு!

இலங்கை பங்குச் சந்தையின் அனைத்து பங்கு விலை சுட்டெண் 8 ஆயிரம் புள்ளிகளைக் கடந்துள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் கடந்த வியாழக்கிழமை அதிகளவான புள்ளிகளைப் பெற்றுள்ளது.

அதனடிப்படையில்,கொழும்பு பங்குச் சந்தை அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் 8,184.14 புள்ளியாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## ஓட்டோ விபத்து; ஒருவர் காயம்!



மூதூர் பாலத்துக்கு அருகில் ஓட்டோ ஒன்று கடந்த வியாழக்கிழமை காலை விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த நபரொருவர் படுகாயமடைந்த நிலையில், மூதூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூதூரிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரமொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் விபத்துத் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# புதிய அரசமைப்புக்கு எதிர்க்கட்சியின் பரிந்துரையை விரைவில் வழங்குவோம்!



## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட வேண்டிய புதிய அரசமைப்பை அரசாங்கத்துக்கு நெருக்கமான சட்டத்தரணிகளை மாத்திரம் உள்ளடக்கி உருவாக்குவதற்கு இடமளிக்க முடியாது. புதிய அரசமைப்பிற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் பரிந்துரைகள் விரைவில் அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

புதிய அரசமைப்புக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள குழுவிற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பரிந்துரைகளை முன்வைக்குமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலமும் குழுவில் அங்கத்துவம் பெறுகின்ற சட்டத்தரணிகளினூடாக மாத்திரம் புதிய அரசமைப்பை உருவாக்க இடமளிக்க முடியாது. நாட்டு மக்கள் அனைவரின் விருப்பு வெறுப்புக்களுக்கு அமையவே அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

சோல்பரி அரசமைப்பு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு அதில் சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உறுப்புரை உள்ளடக்கப்பட்டிருந்தது.

சுதந்திரத்தை அடுத்து இரு அரசமைப்புக்கள் உருவாக்கப்பட்ட போதிலும் அவை இரண்டுக்குமே சிறுபான்மையினரின் ஆதரவு கிடைக்கவில்லை. எனவே அனைத்து இன மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாறி அதற்கமைய புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். இவ்வாறான எமது நிலைப்பாடுகளை உள்ளடக்கி நாம் அரசாங்கத்துக்குக் கடிதம் அனுப்புவோம்.

எமது ஆட்சியில் அரசமைப்பு தொடர்பான 20 குழுக்கள் நியமிக்கப்பட்டன. அதில் பலவற்றின் தலைவர்களாக அப்போதைய எதிர்க்கட்சி பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.

75 தடவைகள் இந்தக் குழு கூடியுள்ளது. எனினும் 2018 அரசியல் சூழ்ச்சியின் பின்னர் அந்த செயற்பாடுகள் முடங்கிவிட்டன. எம்மால் முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்பாடுகளை பின்பற்றுமாறு வலியுறுத்துகின்றோம். மாறாக அரசமைப்பை உருவாக்கும் பொறுப்பை சட்டத்தரணிகளிடம் மாத்திரம் ஒப்படைக்க முடியாது.

அரசமைப்பு என்பது அரசாங்கம் மட்டும் அல்ல. அரசாங்கத்துக்கு தேவையான வகையில் அரசமைப்பு உருவாக்கப்பட்டால் அது வெற்றியளிக்காது. எனவே, புதிய அரசமைப்பை உருவாக்குவதாயின் நாம் நிறுத்திய இடத்திலிருந்து ஆரம்பிக்குமாறு கோருகின்றோம். நாடாளுமன்றத்தினூடாக செய்து முடிக்கக் கூடிய விடயத்தைத் தமக்கு நெருக்கமான சட்டத்தரணிகள் ஊடாக செய்ய முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு ஒரு போதும் எம்மால் இடமளிக்க முடியாது.

கடந்த வருடம் மார்ச் மாதம் வரை விமான நிலையம் திறக்கப்பட்டிருந்த போதே நாட்டில் கொவிட் பரவல் ஆரம்பித்துவிட்டது. எனவே, இப்போது இவர்கள் மீண்டும் விமான நிலையத்தை திறப்பதன் மூலம் கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்கள் இறக்கட்டும். வாழ்பவர்களுடன் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வோம் என்ற போக்கில் செல்வதையே காண்பிக்கிறது.

2015 இற்கு முன்னர் விற்கப்பட்ட தேசிய சொத்துக்கள் நல்லாட்சி அரசாங்கத்தால் மீட்கப்பட்டன. ஆனால், தற்போதைய அரசாங்கம் எம்மீது வீண் பழி சுமத்துகிறது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் 49 வீத உரிமத்தை இந்தியாவிற்கு வழங்கியுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமே இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுமளவிற்கு சீனாவிற்கு இடமளித்தது. அவருக்கு முன்னர் இருந்த எந்தவொரு ஜனாதிபதியும் இவ்வாறு செயற்படவில்லை.

தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கு உலக வங்கியிடம் அரசாங்கம் கடன் கேட்கிறது. இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். அமைச்சர்கள் சிலர் வெளியில் கூறாமல் தடுப்பூசிகளை இட்டுக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. அதனால் தான் அவர்கள் அச்சமின்றி பல்வேறு இடங்களுக்கும் செல்கின்றனர்.– என்றார்.

# தொழில் முயற்சிகளுக்கு கடன்வழங்கல் திட்டங்களை அறிமுகப்படுத்த தீர்மானம்!

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கல் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது.

மத்திய வங்கியின் நாணயச்சபைக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, மத்தியவங்கி அதன் துணைநில் வைப்பு வசதி வீதத்தையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தையும் முறையே 4.5 சதவீதமாகவும் 5.5 சதவீதமாகவும் அவற்றின் தற்போதைய மட்டங்களிலேயே பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் உள்நாட்டு, உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாணயச்சபை கடந்த 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த சந்தைக் கடன் வழங்கல் வீதங்களின் குறைப்பைக் கருத்திற்கொண்டு, பொருளாதார வளர்ச்சிக்கு கடன்வழங்கல் வீதங்களில் தொடர்ச்சியான கீழ்நோக்கிய திருத்தமொன்று அவசியமென்று பரிந்துரை செய்தது.

2020 நவம்பரில் அறிவிக்கப்பட்டவாறு, வங்கித்தொழில் சமூகத்தின் ஆலோசனையுடன் பொருளாத்தாரததுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கல் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நாணயச்சபை தீர்மானித்துள்ளது.

# மேல் மாகாணத்தில் பல நிறுவனங்களுக்கு தனிமைப்படுத்தல் சட்ட நடவடிக்கை ஏற்பாடு!

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அறிவிப்பு

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு சட்டவிதிகளுக்கு புறம்பாகச் செயற்பட்டதாகக் கடந்த ஒன்பது நாள்களுக்குள், 1,107 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன், அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகப்பிரிவினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மேல் மாகாணத்திலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி முதல் விசேட சோதனை நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில், கடந்த ஒன்பது தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது 6 ஆயிரத்து 240 நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 5 ஆயிரத்து 183 நிறுவனங்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியிருந்தமையுடன் 1,107 நிறுவனங்களில் அந்த விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதன் போது சுகாதார விதிமுறைகளுக்குப் புறம்பாகச் செயற்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை காலை ஆறுமணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 910 நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவற்றுள் 807 நிறுவனங்களில் மாத்திரமே முறையான சுகாதார விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 103 நிறுவனங்களில் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதனால், இவ்வாறு சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் இருந்த நிறுவனங்களின் நிர்வாகப்பிரிவினருக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேல்மாகாணத்துக்கு வெளியில் முகக்கவசம் அணியாமை தொடர்பில் கடந்த வியாழக்கிழமை காலை ஆறுமணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் 2 ஆயிரத்து 640 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# வைத்தியர் உள்ளிட்டோரை தாக்கிய குற்றச்சாட்டு: தம்மிக்க பண்டாரவுக்கு எதிராக சிறப்பு விசாரணை!

பேராதனை வைத்தியசாலையின் பல் வைத்தியர் ஒருவர் உள்ளிட்ட குழுவினர் மீது தாக்குதல் நடத்தி, அவர்களை சிறைப்படுத்தி வைத்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், ‘தம்மிக பாணி’ எனும் பெயரில் கொரோனாவுக்கான மருந்து என பாணி வகையொன்றை பிரசித்தம் செய்த ஆயுர்வேத வைத்தியர் என கூறப்படும் தம்மிக்க பண்டாரவுக்கு எதிராக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கேகாலை மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில், தாக்குதலுக்கு உள்ளானவராகக் கூறப்படும் பல்வைத்தியர் தரப்பினரதும், தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் தரப்பின் சிலரதும் வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ள கேகாலை மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார், மேலதிக குற்றவியல் விசாரணைகளை தொடர்வதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய முடிவதாவது –

சில நாள்களுக்கு முன்னர் பேராதனை வைத்தியசாலையின் பல் வைத்தியர் ஒருவரும் அவருக்கு நெருக்கமான சிலரும், கேகாலையில் உள்ள தம்மிக்க பண்டாரவின் வீட்டுக்கு சென்றுள்ளனர். கொரோனா பாணியை பெறும் நோக்கில் அவர்கள் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

இதன்போது, தம்மிக்க பண்டார தான் உற்பத்தி செய்த பாணி தொடர்பில் விளக்கமளிக்கும் போது, மேற்கத்தேய வைத்தியர்கள் மீது விமர்சனங்களை முன்வைத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. அதனை பல் வைத்தியர் தனது தொலைபேசியில் பதிவு செய்துள்ளார் எனவும், அதனை அறிந்த தம்மிக்க பண்டார வைத்தியரின் தொலைபேசியை பறித்து பதிவுகளை அழித்த பின்னர், வைத்தியர் மீதும் அவரது சகாக்கள் மீதும் தனது குழுவினரோடு இணைந்து தாக்குதல் நடத்தி சிறிதுநேரம் சிறைப்பிடித்து வைத்திருந்தார் எனவும் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் குறித்த பல் வைத்தியர், பேராதனை பொலிஸாருக்கு முறைப்பாடளித்துள்ள நிலையில், மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் இந்த முறைப்பாடு மீது விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

காலைக்கதிர் Kalaikkathir


பிரபு ராவ் ஆனந்த் மற்றும் அருண் ரஞ்சன் பிரசாத் (இலங்கை)

# உயிரிழந்த தமிழக மீனவர்கள் நடுக்கடலில் நடந்தது என்ன?

**22.01.2021 அன்று பி.பி.சி. தமிழில் பிரசுரமான கட்டுரை இது.**

இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு நடுக்கடலில் உயிரிழந்தனர் என கூறப்படும் நான்கு மீனவர்களின் உடல்களை உடனடியாக தமிழகம் எடுத்து வரவும், தாக்குதலில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் மீது கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும் எனவும் ராமேஸ்வரம் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**என்ன நடந்தது?**

கடந்த 18ஆம் திகதி காலை புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்திலிருந்து ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஆரோக்கிய ஜேசு என்பவரது மீன்பிடி விசைப்படகில் மேசியா, நாக ராஜன், செந்தில்குமார், சாம்சன் டார்வின் (இலங்கை அகதி) ஆகிய நான்கு மீனவர்கள் மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று மீன்பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

மீனவர்கள் நெடுந்தீவுக்கும் கச்சத்தீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அந்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்



பிடித்தனர் என வழக்குப் பதிவு செய்து ஆரோக்கிய ஜேசு என்பவரது மீன்பிடிப் படகைச் சிறைப்பிடித்து, இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான ரோந்துக் கப்பலுக்கு அருகே நிறுத்தி வைத்துள்ளனர்.

நடுக்கடலில் ஏற்பட்ட திடீர் கடல் சீற்றத்தால் அந்த மீன்பிடிப் படகின் பின்பகுதி இலங்கைக் கடற்படை ரோந்து கப்பலின் மீது மோதியதில் கப்பல் சேதம் அடைந்தது எனவும் இதனால் ஆத்திரம் அடைந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களைத் தாக்கி யமையுடன் மற்றொரு ரோந்து கப்பலைக் கொண்டு மீன்பிடிப் படகைத்தாக்கி மூழ்கடித்தனர் என்றும் இந்தியா தரப்பில் கூறப்படுகிறது.

இந்நிலையில் இலங்கை கடற்பரப்பிற்குள் கடந்த 18 ஆம் திகதி இந்திய மீனவப் படகுகள் உட்பிர வேசித்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தருணத்தில், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்ததாக இலங்கை கடற்படை யின் ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா பி.பி.சி. தமிழுக்கு தெரிவித்தார்.

**மீனவர்களைத் தேட விடாமல் திருப்பி அனுப்பிய இலங்கை கடற்படை வீரர்?**

படகிலிருந்த நான்கு மீனவர்களும் நடுக்கடலில் மாயமானமையால் கடந்த புதன்கிழமை காலை கோட்டைப்பட்டிணத்தில் இருந்து மூன்று விசைப்படகு களில் 15 மீனவர்கள் மாயமான மீனவர்களைத் தேடிச் சென்றனர்.

அப்போது நடுக்கடலில் மாயமான நான்கு மீன வர்கள் பாதுகாப்பாக இலங்கை கடற்படை வசம் உள்ளதாகவும் விரைவில் இந்திய கடலோர காவல் படையிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர் எனவும் சர்வ தேச கடல் எல்லையில் ரோந்து பணியில் ஈடுபட்டி ருந்த இலங்கை கடற்படை வீரர் ஒருவர் தமிழில் கூறி மீனவர்களை கரைக்கு திருப்பி அனுப்பினார் என்றும் மீனவர்களைத் தேடிச் சென்ற ப்ரைட்வின் என்ற மீனவர் பி.பி.சி. தமிழிடம் தெரிவித்தார்.

மேலும் அதே நாள் மாலை சுமார் 6 மணியளவில் இலங்கை நெடுந்தீவு கடற்பரப்பில் மாயமான இரண்டு மீனவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம் மாவட்டம் காங்கேசன்துறை பொலிஸாருக்கு இலங்கை கடற்படையினர் தக வல் தெரிவித்து பின் உடற்கூறு ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அரசு பொது மருத்துவமனையில் உடல்கள் ஒப்படைக்கப்பட்டன.

பின்னர் உடல்களை இந்தியர்கள் என உறுதி செய்ய யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகஅதிகாரிகள் இரு உடல்களின் புகைப்படங்களை ராமேஸ்வரம் மீன் வளத்துறை அதிகாரிகள் மூல மாக மீனவர்களின் உறவினர்களிடம் அடையாளம் காணப்பட்டதில் நடுக்கடலில் மாயமான செந்தில் குமார் மற்றும் சாம்சன் டார்வின் என்பது தெரி வந்தது.

மேலும் இரண்டு மீனவர்களின் உடல்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தேடி வந்த நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் காங்கேசன்துறைக் கடற்பரப்பில் இரண்டு உடல்கள் மீட்கப்பட்டன என இலங்கை கடற்படையினர் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதருக்குத் தகவல் அளித்ததன் அடிப்படை யில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் இரண்டு உடல்களும் பெறப்பட்டு உடற்கூறு ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அரசு பொது மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளன.

இரண்டு உடல்களின் புகைப்படத்தை கொண்டு மாயமான மீனவர்கள் நாகராஜன் மற்றும் மெசியா என்பது உறுதி செய்யபட்டுள்ளது.

**இலங்கை அகதி மரணம்**

இதனிடையே கடந்தபுதன்கிழமை மீட்கப்பட்ட சாம்சன் டார்வின் இலங்கையில் ஏற்பட்ட இறுதி கட்டப் போரின் போது யாழ்ப்பாணத்தில் இருந்து அகதியாக தமிழகம் வந்து மண்டபம் அகதிகள் முகாமில் வசித்து வரும் இலங்கை அகதி.

இவர் முகாமில் உள்ள மன்னார் பேச்சாலையைச் சேர்ந்த இலங்கை அகதி விஜய லெட்சுமியை திரும ணம் செய்து மண்டபம் முகாமில் வசித்து வருகிறார்.

சாம்சன் டார்வினுக்கு குழந்தை பிறந்து 20 நாள்களே ஆகிறது. இவர் இலங்கையர் என்பதால் இவரது உடலை உடற்கூறு ஆய்வு செய்து தமிழகம் கொண்டு வர முடியாது என இந்தியத் தூதரகம் தெரி வித்துள்ளது.

இதனால் சாம்சனின் மனைவி விஜய லெட்சுமி தனது கணவரின் உடலை தமிழகம் கொண்டு வர வேண்டும் அவருடயை முகத்தைத் தன் குழந்தைக்கு




காட்ட வேண்டும் என யாழ்ப்பாணத்தில் உள்ள துணை தூதுவருக்குக் கடிதம் ஒன்றை மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ளார்.

**திங்கட்கிழமை இரவு என்ன நடந்தது?**

திங்கட்கிழமை இரவு என்ன நடந்தது என்பதை அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் அருள் பி.பி.சி. தமிழிடம் கூறுகையில், நாங்கள் 18ஆம் திகதி காலை மீன் பிடி அனுமதி சீட்டு பெற்று கோட்டைப் பட்டிணத்தில் இருந்து மீன் பிடிக்க கடலுக் குள் சென்றோம்.

மீனவர்கள் கச்சத்தீவுக்கும் நெடுந்தீவுக்கும் இடையே மீன் பிடித்து கொண்டிருந்த போது அப்பகுதி யில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படை இது இலங்கை கடற்பரப்பு இங்கு தமிழக படகுகள் மீன் பிடிக்க கூடாது மீறி மீன் பிடித்தால் கைது செய்யப்படும் என ஒலிப் பெருக்கி மூலம் எச்சரித்தனர்.

இதனால் அப்பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் நாலாபுறமும் சிதறி ஓட ஆரம்பித்தோம். அப்போது ஜேசு என்பவரது படகை இலங்கை கடற் படை கைது செய்தது.

அப்போது விசைப்படகின் ஓட்டுநர் மெசியா படகை கடற்படை சிறைபிடித்தது எனவும், படகின் மீது கடற்படைக் கப்பலை கொண்டு மோதியதில் படகு கடலில் மூழ்கிறது யாராவது காப்பாற்றுங்கள் எனப் படகில் உள்ள வாக்கி டாக்கி மூலம் கூறினார்.

நடுக்கடலில் படகு மூழ்கியபோது கடற்படை கப்பல் அருகில் நின்றதால் நாங்கள் அருகே சென்றால் எங்களையும் இலங்கை கடற்படை கைது செய்யும் என பயந்து மீனவர்கள் யாரும் காப்பாற்ற செல லவில்லை. சற்று நேரத்தில் என் கண் முன்னே படகு மூழ்கியது. என்கிறார் அருள்.

உயிரிழந்த மீனவர் மெசியாவின் தாய் தனது ம கனின் உடலை உடனடியாக சொந்த ஊருக்கு எடுத்து வர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணீருடன் தெரிவித்தார்.

நான்கு மீனவர்கள் நடுக்கடலில் உயிரிழந்தது குறித்து ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவச் சங்க தலைவர் ஜேசு ராஜா பி.பி.சி. தமிழிடம் பேசுகையில், நடுக்கடலில் உயிரிழந்த ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்களின் மர ணத்தில் எங்களுக்குச் சந்தேகம் உள்ளது. இந்தியத் துணைத் தூதரால் நேற்றுமுன்தினம் இரவு அனுப்பப்பட்ட உயிரிழந்த மீனவரின் புகைப்படத்தில் மீனவர்களின் உடலில் காயங்கள் உள்ளன. எனவே மீனவர்களின் உடலை தமிழகம் கொண்டு வந்து தமிழக மருத்துவர்களால் உடற்கூறு ஆய்வு செய்ய வேண்டும். எனத் தெரிவித்தார்.

இதுதொடர்பில், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் பி.பி.சி. தமிழிடம் பேசுகையில், மீனவர்களின் இறப்பு வருத்தத்தை தருகிறது. ஊடகங்கள் வாயிலாக எனக்கு உயிரிழந்த மீனவர்களின் புகைப்படங்கள் கிடைத்தன. அதிகார பூர்வ கடிதம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை, என்றார்.

(07 ஆம் பக்கம் பார்க்க....)



# உயிரிழந்த தமிழக மீனவர்கள் நடுக்கடலில் நடந்தது என்ன?

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், புதுக்கோட்டை மாவட்டம் கோட் டைப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஆரோக்கிய ஜேசுக்கு சொந்தமான விசைப்படகில் சென்ற 4 மீனவர்கள் இலங்கைக் கடற்படையின் தாக்குதலில் இறந்து விட்டனர் எனவும் மீனவர்கள் மூலம் தகவல் வரப்பெற்றுள்ளது. இவ்விபத்தில் இறந்த மீனவர் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 10 லட்சம் ரூபா வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இப்படிப்பட்ட தாக்குதலில் ஈடுபட்டு தமிழ் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கும் இலங்கை கடற்படை செயலை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

இச்சம்பவம் தொடர்பாக இந்திய தூதரகத்தின் மூலம் உரிய விசாரணை மேற்கொள்ள வலியுறுத்தி மாண்புமிகு பாரத பிரதமருக்கு கடிதம் எழுதி உள்ளேன், என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இலங்கை தரப்பில் நடவடிக்கை

இந்திய மீன்பிடிப் படகு கடலில் மூழ்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்த இருவேறு குழுக்கள் இலங் கையில் நியமிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் குழுவொன்றும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மற்றுமொரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பி.பி.ஸி. தமிழுக்கு இதனை உறுதிப்படுத்தினார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் கடந்த 18 ஆம் திகதி இந்திய மீனவப் படகுகள் உட்பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்ததாக இலங்கை கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா பி.பி.ஸி. தமிழுக்கு தெரிவித்தார்.

இதன்போது, இந்திய படகொன்று தமது படகுடன் மோதுண்டு கடலில் மூழ்கியது எனவும் அவர் கூறினார்.

இந்தியாவிலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற நால்வர் மீண்டும் நாடு திரும்பவில்லை என இந்திய அதிகாரிகள் தமக்கு அறிவித்த நிலையில், அந்தப் படகில் நால்வர் பயணித்திருக்கலாம் என தாம் எண்ணியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த நால்வரையும் தேடும் பணிகளை இலங்கை கடற்படையின் சுழியோடிகள் குழு மேற்கொண்டிருந்தது.

கடந்த புதன்கிழமை நண்பகல் வேளையில் மூழ்கிய படகை கடற்படையினர் கண்டுபிடித்திருந்தமையுடன், அதனைத் தொடர்ந்து நடத்திய தேடுதலில் இருவரின் சடலங்களை கண்டெடுத்திருந்தனர்.

அதன்பின்னர், நேற்றைய தினமும் கடற்படையின் சுழியோடிகள் தேடுதல்களை நடத்தி, எஞ்சிய இருவரின் சடலங்களையும் மீட்டனர் எனவும் கடற்படை பேச்சாளர் பி.பி.ஸி. தமிழுக்குக் கூறினார்.

நால்வரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டமையை அடுத்து, இலங்கை கடற்படையின் தேடுதல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

### எதிர்பாராத விபத்து

இந்தச் சம்பவம் தொடர்பில் பி.பி.ஸி. தமிழ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தொடர்பு கொண்டு வினவியது.

இந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்துள்ளமை உறுதியாகியுள்ளது எனவும், அவர்கள் எல்லை தாண்டியமையினாலேயே இலங்கை கடற்படை அவர்களை கைது செய்ய முயற்சித்தனர் எனவும் அவர் கூறினார்.

> தமிழர்களின் தொப்புள் கொடி உறவுகளாக தமிழகத்துடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே, தற்போதைய அரசாங்கம் தன்னை கடற்றொழில் அமைச்சராக நியமித்தது என டக்ளஸ் அவர் தெரிவித்தார்.

எல்லை தாண்டிய மீனவர்களை கைது செய்ய முயற்சித்தபோது, எதிர்பாராத விதமாக விபத்தொன்று ஏற்பட்டு, நால்வர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான உயிர் ஆபத்துக்கள் ஏற்படக்கூடாது என்பதற்காகவே, தான் மிகவும் பொறுப்புடன் கடமையாற்றினார் எனவும் அவர் கூறினார்.

தமிழக மீனவர்களை எல்லை தாண்டி வருகைத் தந்து மீன்பிடிப்பதை, இந்திய அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனக் கூறிய அவர், இந்த மீனவப் பிரச்சினையைக் கலந்துரையாடலின் ஊடாகவே முடிவுக்கு கொண்டு வர முடியும் எனவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இந்திய மீனவர்கள் அத்து மீறி, இலங்கை கடற்பரப்பிற்குள் வருகைத் தந்து, வடக்கு தமிழ் மீனவர்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்திருந்ததாகவும் அவர் நினைவுப்படுத்தினார்.

தமது நாட்டு மீனவர்களை பாதுகாப்பதற்காக, எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை கைது செய்ய கடற்படை நடவடிக்கை எடுத்தது எனவும் அமைச்சர் கூறுகின்றார்.

இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கொலை செய்து விட்டது என தமிழகத்தில் எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில், பி.பி.ஸி.தமிழ், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வினவியது.

இந்தச் சம்பவம் எதிர்பாராது நடந்ததாக கூறிய அவர், தமிழகத்தினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டையும் நிராகரித்தார்.

அத்துடன், இது கொலையா என்பது தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக, உயிரிழந்த நால்வரது சடலங்கள் மீதான பிரேத பரிசோதனைகளை இலங்கையில் நடத்தாது, சடலங்களை இந்திய அதிகாரிகளிடம் எதிர்வரும் ஓரிரு தினங்களில்



கையளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவில் சடலங்கள் மீதான பிரேத பரிசோதனைகள் நடத்தப்படும் பட்சத்தில், இது கொலையா? அல்லது எதிர்பாராத விதமாக நடந்த சம்பவமா? என்பதை, அந்த நாட்டிலேயே உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கை மற்றும் இந்திய மீனவப் பிரச்சினைக்கு பேச்சு ஊடாகவே மாத்திரமே நிரந்தர தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முடியும் என கூறிய அவர், அதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற் கொள்வதாக குறிப்பிட்டார்.

தமிழர்களின் தொப்புள் கொடி உறவுகளாக தமிழகத்துடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே, தற்போதைய அரசாங்கம் தன்னை கடற்றொழில் அமைச்சராக நியமித்தது என டக்ளஸ் அவர் தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் வருகைத் தந்து,



சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்வது, இரு தரப்பிற்கும் ஆரோக்கியமானது என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனா பரிசோதனைகளில் தனியார் துறை நடவடிக்கை தொற்று பரவலுக்கு எதிரான போராட்டத்துக்குப் பின்னடைவு!

## என்கிறார் இராணுவத் தளபதி



சுகாதார அமைச்சிடம் அனுமதி பெறாத தனியார் வைத்தியசாலைகள் பிராந்திய மற்றும் சிறு ஆய்வு கூடங்களில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்கின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் தொற்றுப் பரவலுக்கு எதிரான போராட்டத்துக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பிராந்திய மற்றும் சிறு ஆய்வு கூடங்களில் பரிசோதனையை மேற்கொண்டு தொற்று உறுதி செய்யப்படுபவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படாமல் மறைந்து கொள்கின்றனர் எனவும் இராணுவத் தளபதி கூறினார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் தனியார் துறையின் உயர் தொழில்நுட்ப ஆய்வு கூட முகாமையாளர்களுடன் கடந்த புதன்கிழமை விசேட சந்திபொன்றை நடத்தினர். இந்த சந்திப்பின் போதே இராணுவத் தளபதி இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

தனியார் வைத்தியசாலைகள் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். சோதனைகளுக்கு வெவ்வேறு கட்டணத்தை அறவிடுகின்றன என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கொவிட் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு தொழில்நுட்ப ரீதியாக பொருத்தப்பட்ட 30 ஆய்வு கூடங்கள் மாத்திரமே சுகாதாரத் துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பரிசோதனைகளுக்கான தற்போதைய கட்டண வரையறைகளை மக்களின் நலனுக்காக மேலும் குறைக்க முடிந்தால் அது மிகவும் சிறந்ததாகும். மாறாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. உக்ரைனிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறிப்பிட்ட சில தனியார் துறை வைத்தியசாலைகளில் பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்த சுகாதார அதிகாரிகளால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. – என்றார்.

இதன் போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன –

இந்த நடைமுறைக்கான வழிகாட்டுதல்களையும் விதிமுறைகளையும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். தவறான நடைமுறைகளை நாடாமல் பரிசோதனை முறையின் நம்பகத்தன்மையை மிக உயர்ந்த மட்டத்தில் உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை நடத்துவதற்கான பொதுவான ஒழுங்குமுறை பொறிமுறையை அமுல்படுத்துதல், இலங்கை முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆடைத் தொழில் ஊழியர்கள், வெளிநாடுகளுக்குச் செல்வோர், அந்தந்த வைத்தியசாலைகளில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படுபவர்களுக்கு இது போன்ற நடைமுறைகளின் 100 வீதம் நம்பகத்தன்மையை ஒழுங்குபடுத்துவதற்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி அவற்றை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

# நிலக்கரி கொள்வனவு விலைமனு கோரலிலும் பாரியளவில் மோசடி!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குரிய நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரலின் ஊடாக பாரிய மோசடி இடம்பெறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:–

இலங்கை மின்சாரசபை, சிலோன் நிலக்கரி நிறுவனம், மின்வலு சக்தி அமைச்சு ஆகியவற்றின் மீது நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மிகமுக்கிய குற்றச்சாட்டொன்றை முன்வைத்திருந்தார்.

மீண்டும் அதிக விலைக்கு நிலக்கரியைக் கொள்வனவு செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். நிலக்கரி மின்னுற்பத்தி ஆலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இத்தகைய செயற்பாடு இடம்பெற்று வருவதை நாம் அறிவோம்.

புத்தளம் மின்னுற்பத்தி நிலையத்தின் ஊடாக நிலக்கரியைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்வதாகக்கூறி, பல தடவைகள் முறையற்ற விதத்தில் விலைமனுக்கோரல் முன்னெடுக்கப்பட்டது. கடந்த காலத்தில் நான் அமைச்சராக இருந்தபோதும் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தடுப்பதற்கு முற்பட்ட காரணத்தால் எனக்கு அந்த அமைச்சுப்பதவி இல்லாமல் செய்யப்பட்டது. இந்நிலையில் தற்போது மீண்டும் அவ்வாறான மோசடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முறையான கொள்முதல் திட்டம் பின்பற்றப்படாமையின் விளைவாக தற்போது உடனடிக்கொள்வனவு முறை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எனினும் ஒரு தடவையில் உடனடிக்கொள்வனவின் போது ஒரு தொன் நிலக்கரிக்குச் செலுத்திய பணத்தை விட அதிக பணம் பிறிதொரு தடவை உடனடிக்கொள்வனவின் போது செலுத்தப்படுகின்றது.

எனினும் தற்போது கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியின் காரணமாக உலகளாவிய ரீதியில் எரிபொருளுக்கான கேள்வி வெகுவாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அதனால் நிலக்கரி மற்றும் மசகு எண்ணெய் ஆகியவற்றின் விலை சாதாரண மட்டத்திலேயே காணப்படுகின்றது.

# ஏப்ரல் முதல் ஒற்றை பயன்பாடு பிளாஸ்டிக் பொருள்களுக்குத் தடை

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தியிலான பொருள்களை தடை செய்யும் தீர்மானம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து தீர்மானத்தை செயற்படுத்தும் வர்த்தமானியில் சுற்றுலாத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கையொப்பமிட்டுள்ளார்.

ஒருமுறை மாத்திரம் பாவனைக்கு பயன்படுத்தப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தியிலான பொருள்களை இந்த மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து தடை செய்யும் யோசனையை சுற்றுலாத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கடந்த வருடம் அமைச்சரவையில் முன்வைத்தார்.

தடைசெய்யத் தீர்மானிக்கப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு நிவாரணம் மற்றும் இதர நடவடிக்கைகளுக்கான காலஅவகாசம் வழங்க வேண்டும் என அமைச்சரவை மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைய இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வாசனைத் திரவியங்கள் மற்றும நீராகார பொருள்கள் அடைக்கப்பட்ட சிறு பொலித்தீன் பெக்கேட், காற்று நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் உற்பத்தியிலான விளையாட்டு பொருள்கள், மைக்ரோன் 20 இற்குக் குறைவான லஞ்சீட் (உணவு பொதியுறை) ஆகிய உற்பத்திகளை ஏப்ரல் மாத்தில் இருந்து உற்பத்தி செய்யவும், பகிர்ந்தளிக்கவும் விதிக்கப்பட்டுள்ள தடை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இருந்து அமுல்படுத்தப்படும்.

# தமிழரசுத் தலைவர் இராசமாணிக்கத்தின் சிலைக்கு மாலை அணிவித்தது நினைவுகூரல்!





இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் சி.மூ. இராசமாணிக்கத்தின் 108 ஆவது ஜனனதினம் கடந்த புதன்கிழமை நினைவு கூரப்பட்டுள்ளது.

கடந்த 1952 ஆண்டு தமிழ் மக்களின் பிரதிநிதியாக பட்டிருப்பு தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தமையுடன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவராகவும் 1970 ஆண்டு வரை செயற்பட்டிருந்தார்.

இந்தநிலையிலேயே களுவாஞ்சிக்குடியிலுள்ள சி.மூ. இராசமாணிக்கத்தின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து நினைவு கூரல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் இரா. சாணக்கியனின் பாட்டனார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை தொடர்பாக மிக மோசமான அறிக்கை வெளியிடுவார் ஐ.நா. மனித உரிமை ஆணையர்?



ஜெனீவாவில் எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் இலங்கை தொடர்பாக ஒரு மோசமான அறிக்கையை வெளியிடுவார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெனீவா அமர்வுக்கு முன்னதாக இந்த அறிக்கையின் நகல் வெளியிடப்படும் எனவும் அறிக்கையின் நகல் பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர் அதன் பதில் உரிமைக்காக இலங்கை அரசுக்கு அந்த அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் நகலை இலங்கை பெற்றிருப்பதை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உறுதிப்படுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த அறிக்கைக்கு இலங்கை தனது பதிலை இன்னும் சமர்ப்பிக்கவில்லை என்று பாலசூரிய தெரிவித்தார் எனவும் கூறப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வின் நிகழ்ச்சி நிரலில் பெப்ரவரி 22 முதல் மார்ச் 19 வரை நடைபெறவுள்ள அமர்வுகளில் இலங்கை உள்ளது.

குறித்த அமர்வின் போது, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றமையை உறுதி செய்வதில் அரசாங்கத்தின் தற்போதைய மற்றும் முன்னாள் தோல்வி தொடர்பாக மிச்சேல் பச்லெட் விமர்சனங்களை எழுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 10 ஆயிரத்தையும் தாண்டியுள்ளது கம்பஹா கொரோனாத் தொற்றாளர்!

கம்பஹா மாவட்டத்தில் இருந்து பதிவான கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்தையும் கடந்துள்ளதாக கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மிகாரா எப்பா தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தின் கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் 176 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் விளைவாக கம்பஹா மாவட்டத்தில் இதுவரை பதிவான கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையானது 10 ஆயிரத்து 179 ஆக உயர்வடைந்துள்ளதாக வைத்தியர் மிகாரா எபா கூறினார்.

இந்த கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிய கம்பஹா மாவட்டத்தில் கடந்த வியாழன் மாலையுடன் மொத்தமாக ஒரு லட்சத்து 48 ஆயிரத்து 109 பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்தியா, ஜப்பானுக்கு கிழக்கு முனையத்தை விற்க எமது ஆட்சியில் ஒப்பந்தங்கள் இல்லை!

## ஐ.தே.க. விளக்க அறிக்கை

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் அல்லது துறைமுகத்தின் எந்தவொரு பகுதியையும் இந்தியாவிற்கோ ஜப்பானுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ விற்பதற்கு 2019 இல் எமது அரசாங்கம் எந்தவோர் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட வில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் இந்தியாவிற்கோ ஜப்பானுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ விற்பதற்கு 2019 இல் எமது அரசாங்கம் எந்தவோர் ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை. கிழக்கு முனையத்தில் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிறுவனத்துக்கு மாத்திரமே ஒப்பந்தம் செல்லுபடியாகின்றதே தவிர மற்றுமொரு நாட்டுடன் அல்ல.

கிழக்கு முனையத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளை நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு இலங்கை, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. அதற்கமைய 51 வீத உரிமத்தை இலங்கைக்கும் எஞ்சிய 49 வீதத்தை இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன் அந்தப் பணிகளை முன்னெடுக்க நிறுவனமொன்றை ஸ்தாபிக்கவும் உறுதி செய்யப்பட்டது. இதனடிப்படையில் மூன்று நாடுகளுக்கிடையில் ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்காக 2019 செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது.

கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் கட்டமைப்புகளை வழங்குவதற்கும் அதனை முகாமை செய்வதற்கும் டர்மினல் ஒபரேன் கம்பனி உருவாக்கப்பட்டது. கிழக்கு முனையத்தை செயற்படுத்துவதற்கு குறிப்பிட்டவொரு காலம் டர்மினல் ஒபரேன் கம்பனிக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததோடு, அதன் பின்னர் அதனை செயற்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்திற்கமையவாகும்.

ஆகவே, இங்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கிழக்கு முனையத்தை விற்பதற்கான நிலைப்பாடுகள் முன்வைக்கப்படவில்லை. அதன் அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை இரு கட்டங்களாக முன்னெடுப்பதற்கே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

# கொரோனா கட்டுப்பாடு இல்லாமல் பரவியுள்ளது தொற்றில் இருந்து மீண்ட தயாசிறி தெரிவிப்பு!



கொரோனாவைரஸ்தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பூரண குணமடைந்து கடந்த புதன்கிழமை வீடுதிரும்பியுள்ளார்.

இந்த நிலையில், கொரோனா வைரஸின் பாதிப்பு தொடர்பாக அவர் தனது உத்தியோகப்பூர்வ முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் –

நான் சமீபத்தில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், கொவிட் நோய்க்கு சிகிச்சைப் பெற்று வீடு திரும்பியுள்ளேன். எனக்கு சிகிச்சையளித்த வைத்தியர் அனுராதா உள்ளிட்ட வைத்தியர் குழுவினருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் தங்கியிருந்த ஹிக்கடுவ ஹோட்டலின் ஊழியர்களுக்கும் நான் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டதிலிருந்து விரைவாக மீட்க விரும்பிய மகா சங்க மற்றும் ஏனைய மத ஆசாரியர்களுக்கும் தீவு முழுவதும் உள்ள எனது அன்பான மக்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல், நாடு முழுவதும் வேகமாகப் பரவி வரும் இந்த கொரோனாவைரஸ் அனைவரையும் அழித்து வருகிறது. எனவே உங்களுக்கு காய்ச்சல், இருமல், சுவையின்மை போன்ற அறிகுறிகள் இருந்தால், நீங்கள் முதலில் உங்கள் குடும்ப உறுப்பினர்களை விட்டுவிலகி சுய தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் உங்கள் அருகிலுள்ள பொது சுகாதார ஆய்வாளருக்கு தெரிவிக்க வேண்டும். பொறுப்பாக இருப்பதன் மூலம் இந்த நோயை நாம் சற்று தொலைவில் பெற முடிகிறது.

இந்த நேரத்தில், கொரோனா நோய் நாடு முழுவதும் கட்டுப்பாடு இல்லாமல் பரவியுள்ளது என்பதை நாங்கள் அறிவோம். இந்த நிலையில், அனைத்து நோயாளிகளையும் சுகாதார மையங்களுக்கு அனுப்புவதற்கான சூழ்நிலை அரசாங்கத்துக்கு இல்லை.

ஏனெனில் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ ஊழியர்கள் மற்றும் ஒரு பெரிய தொகையை அரசாங்கம் செலவழிக்க முடியாது.

எனவே, அறிகுறிகள் தோன்றினால், சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள பொது சுகாதார ஆய்வாளரால் வீடுகளைச் சரிபார்க்கும்படி நான் அரசாங்கத்தையும் சுகாதாரத் துறையையும் கேட்டுக்கொள்கிறேன். வீட்டிலேயே சுகாதாரம் அவசியம்.

இதேபோல், எதிர்காலத்தில் அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களை அழைத்து வர அரசாங்கம் எதிர்பார்க்கும் தருணத்தில், அவர்கள் அனைவருக்கும் ஆரோக்கியமான மையங்களை வழங்குவதும் எளிதான காரியமல்ல.

இதற்கு ஒரு தீர்வாக, அவர்கள் நான்கு நாள்களுக்கு தங்கள் சொந்த வீட்டில் வேறு அறை மற்றும் கழிப்பறை வசதிகளையும் வைத்திருக்க வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். இதைத் தவிர வேறு வழியில்லை என்பது நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற எனது உணர்வு.

ஆகவே, சரியான சிகிச்சை முறையைக் கண்டுபிடிக்கும் வரை நாங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதை மக்களுக்கு நினைவூட்டுகிறேன்.

சமூக தூரத்தை பாதுகாப்போம். முகத்தை மூடிமறைப்போம். குடிமக்களின் பொறுப்பை நிறைவேற்றுவோம். – என அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையக ஒப்புதலுக்காக இரண்டு தடுப்பூசிகள் பரிந்துரை!

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலுக்காக இரண்டு தடுப்பூசிகள் அரசாங்கத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன என அந்த ஆணையத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வியடம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகா மற்றும் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளின் பாவனைக்கு ஒப்புதல் கோரியே அரசாங்கத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக நிபுணர்களின் குழு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் கொரோனா தடுப்பூசி போட இலங்கை திட்டமிட்டுள்ளது. இந்த நிலையில், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசிகளை வழங்க தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலுக்காக இந்தியா காத்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு. அரசடி கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது!

மட்டக்களப்பு – அரசடி கிராம உத்தியோகத்தர் பிரிவு கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காத்தான்குடி பிரிவுகடந்த வியாழன் மாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரகம – அட்டலுகம, மொனராகலை – படல்கும்புற ஆகிய பகுதிகளும் கடந்த வியாழன் மாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

# திருமலை பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு!

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் கடந்த வியாழக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களை முதலில் அவர்களே கையாளுவதாகவும் எனினும் அதற்குப் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை வைத்தியசாலை வட்டாரங்கள் தமக்கு பெற்றுத்தரவில்லை எனத் தெரிவித்து இவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

சமூக இடைவெளியைப் பேணி முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் பணிபுரியும் அனைத்து சிற்றூழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

பாதுகாப்பு அங்கிகள், கையுறைகள், முகக் கவசங்கள் என்பன அரசாங்கத்தாலோ வைத்தியசாலை நிர்வாகத்தினராலோ வழங்கப்படுவதில்லை எனவும் தமது சொந்த செலவிலேயே இவற்றைப் பெற வேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளனர் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் சிற்றூழியர்களுக்காக அரசால் வழங்கப்பட்டிருக்கும் நீல நிற அங்கியைக்கூட வைத்தியசாலை நிர்வாகம் இன்னமும் வழங்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## பயிர் நோய்களை கட்டுப்படுத்த நுண்ணுயிரிகள்

சூடோமோனாஸ் புளூரசன்ஸ், டிரைகோடெர்மா விரிடி போன்ற நுண்ணுயிரிகளை பயன்படுத்தி பயிர் நோய்களை கட்டுப்படுத்தலாம். மண்வழி பரவும் நாற்று அழுகல், வேர் அழுகல் மற்றும் வாடல் நோய்களை சூடோமோனாஸ் புளூரசன்ஸ் கட்டுப்படுத்துகிறது.

விதையின் மேற்புறம், வேர்,வேர் அடிமண் போன்ற பாகங்களில் நுண்ணுயிரிகள் வளர்ந்து பயிர்களில் வளர்ச்சியைத் தூண்டுவதன் மூலம் நோய்களை கட்டுப்படுத்துகிறது. இதனால் பயிர்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.

ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் சூடோமோனாஸ் கலந்து விதைநேர்த்தி செய்யலாம். நடவுக்கு முன் நாற்றங்காலில் இருந்து பிடுங்கிய நாற்றுக்களின் வேர்களை, சூடோமோனாஸ் கரைசலில் ஒரு மணி நேரம் ஊறவைத்து நடவேண்டும். நடவு முடித்து 30 நாள்கள் கழித்து, எக்டேருக்கு இரண்டரை கிலோ சூடோமோனாஸ் வீதம், 50 கிலோ சாண எரு அல்லது மண்புழு உரம் அல்லது மணலுடன் கலந்து வயலில் தூவ வேண்டும்.

உணவு மற்றும் வாழிடத்திற்கு நோய்க் காரணிகளுடன் போட்டியிடுவதன் மூலம், டிரைகோடெர்மா விரிடி நுண்ணுயிரியானது, பயிர்களின் நோயை கட்டுப்படுத்துகிறது. நொதிகள் மற்றும் எதிர்உயிர்க் காரணிகளை சுரந்து, நோய்க் காரணிகளை அழிக்கிறது. பயறு, எண்ணெய் வித்துக்கள், காய்கறி, மலர், பழப்பயிர்களில் நோயை கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

**ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி**

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியக் குடியரசுத் தினம்: யாழில் கொண்டாட்டம் ரத்து

## மீனவர் மரணத் துயரின் காரணமாக

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 22

இந்திய மீனவர்களின் உயிர் இழப்பின் எதிரொலியாக யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் இடம் பெறவிருந்த குடியரசு தினக் கொண்டாட்டம் இரத்துச் செய்யப்பட்டதாக அறிய வருகின்றது.

இந்திய மீனவர்கள் பயணித்த படகு கடந்த 18ஆம் திகதி நெடுந்தீவு அருகே இடம்பெற்ற சம்பவத்தில் தகர்ந்தது. இந்திய மீன்பிடிப் படகில் பயணித்த நால்வரும் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்கள் தற்போது வரையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ளன. இதனால் ஏற்பட்ட சர்ச்சையும் பதற்றமும் தமிழகத்தில் தொடர்ந்தும் நீடிக்கின்றன.

இந்த நிலையில் இதற்கான எதிர்ப்பை தெரிவிக்கும் நோக்கிலும், இந்த மீனவர்களின் இறப்பின் துயரில் பங்கெடுக்கும் வகையிலும் எதிர் வரும் 26ஆம் திகதி இந்தியாவின் குடியரசுத் தினக் கொண்டாட்ட நிகழ்வு ரத்துச் செய்யப்படுவதாக அறிய வருகின்றது.

இந்தக் கொண்டாட்டம் யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இங்கும் மிகவும் கோலாகலமாக இடம்பெறுவது வழமை.

இந்த ஆண்டு கொரோனா காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இதனை மேற்கொள்ள திட்டமிடப்பட்டபோதும் அரசியல் சூழல் காரணமாக குடியரசுத் தின கோலாகலம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

இராஜதந்திர நிகழ்வுகள், நெருக்கடிகள் காரணமாக இலங்கை - இந்திய அரசியலிலும் உறவிலும் பெரும் பரபரப்பு நிவுவதும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தடுப்பூசி போடுவது பற்றி சனி 3 இடங்களில் விசேட ஒத்திகை!

யாழ்ப்பாணம், ஜனவரி 22

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுக்கான தடுப்பூசி தருவிப்பதற்குச் செய்த அனுமதியளிக்கப்பட்ட நிலையில் தடுப்பூசி போடுவது எப்படி என்பது குறித்து நாளை (சனி) விசேட ஒத்திகையை நடத்த சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த ஒத்திகை பிலியந்தலை மற்றும் ராகம வைத்தியசாலை உள்ளிட்ட 3 இடங்களில் நடத்தப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தடுப்பூசி செயல்முறை தொடங்கிய பின்னர் ஏற்படக் கூடிய நடை முறைச் சிக்கல்களை அடையாளம் காண்பதில் ஒத்திகை கவனம் செலுத்தும். ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் எத்தனை பேருக்குத் தடுப்பூசி போடலாம் என்று ஆராயப்படும்.

தற்போது 26 கொரோனா நோயாளிகள் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்ற நோயாளிகள் 79 மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த விடுமுறை நாள்களில் பொதுமக்கள் பல்வேறு இடங்களுக்குப் பயணித்ததால் கடந்த சில நாள்களில் கொரோனா நோய்த் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

- என்றார்.

# 'கொரோனா'விலிருந்து 48,617 பேர் மீண்டார்கள்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 633 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 48 ஆயிரத்து 617 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 7 ஆயிரத்து 183 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இதுவரை 276 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் இன்று வரை 56 ஆயிரத்து 76 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விமான நிலையங்கள் ஊடாக கொரோனா பரவவேமாட்டாது!

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் பிரசன்ன



சுற்றுலாத்துறைக்காகத் தற்போது விமான நிலையங்கள் திறக்கப்பட்டாலும், கொரோனா பரவல் அச்சுறுத்தல் எதுவுமில்லை.

- இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்னரணதுங்க தெரிவித்தார்.

எனினும், சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குள் வருவதில் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளது என்பதை அடுத்த இரண்டு வாரங்களுக்கு ஆராய உள்ளதுடன் அவ சியமாயின் மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது வரையில் 35 விமான சேவைகள் இலங்கைக்கான பயணாங் களை மேற்கொள்ள இணங்கியுள்ளன. எனவே, மீண்டும் இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்த இது நல்லதொரு வாய்ப்பாக அமைந்துள்ளதாகவே நாம் கருதுகிறோம்.

இந்த ஆண்டில் மூன்று மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒரு நாளைக்கு சுமார் 2 ஆயிரத்து 500 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய விதத்திலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்க முடியும்.

பயணிகள் தம்மைப் பதிவு செய்து கொள்வது தொடக்கம் மீண்டும் இந்த நாட்டில் இருந்து வெளியேறும் வரையில் 'டிரவல் - பபிள்' திட்டத்துக்கு அமையவே செயற்பட முடியும்- என்றார்.

# காணி முறைகேடு தொடர்பில் ஆராய விசேட பொலிஸ் பிரிவு

## அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைய காணி தொடர்பான முறைகேடுகள் குறித்து ஆராய காணி அமைச்சின் கீழ் விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

– இவ்வாறு காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் கீழ் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தனிநபர்களினாலும் தோட்ட நிறுவனங்களினாலும் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தப் புதிய பிரிவின் ஊடாக எந்தவொரு அரசியல் மற்றும் தனியாரின் தலையீடும் இன்றி காணிகளை மீட்டு நிலமற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, காணி தொடர்பான முறைகேடுகள் குறித்து திணைக்களத்துக்குத் தெரிவிக்க 1931 என்ற விசேட தொலைப்பேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்குப் பணிப்பாளராக ஓய்வுபெற்ற தேசிய புலனாய்வுத்துறையின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரிசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் புதிய பிரிவுக்குத் தலைமை தாங்க இரண்டு ஆய்வாளர்கள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது – என்றார்.

# ட்ரம்பின் வெளியேற்றம் இலங்கைக்கு ஒரு பாடம்

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப்பின் வெளியேற்றம் இலங்கைக்கு ஒரு பாடம். நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதித்துறை, ஊடகத்துறை ஆகியவை ஒன்றையொன்று, திருத்தி, கட்டப்பாட்டுக்குள் கொண்டுவருமே தவிர, இலங்கையை போல் கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடிக்காது என அமெரிக்கா நிரூபித்து விட்டது.

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன் னணி - தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்க ஜனநாயக தேச அமைப்பின் ஏனைய தூண்கள், ஆம் ஐயா (இயஸ் சேர்) என்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் சரணடையவில்லை.

நீதித்துறையும், நாடாளுமன்றமும், ஊடகத்துறையும் ஜனாதிபதி ட்ரம்பை வெளுத்து வாங்கி வெளியேற்றி உள்ளன. இன்று 'ஜனாதிபதி சேர்' தோற்று போய் அவமானப்பட்டு வெளியேறியுள்ளார். அமெரிக்காவின் ஜனநாயக அமைப்பு வென்றுள்ளது.

அமெரிக்காவின் தேர்தலை அடுத்த ஆட்சி மாற்றக் குளறுபடிகளைப் பார்த்து, இலங்கையின் பல பேரினவாத 'அறிவாளிகள்' அமெரிக்காவை எள்ளி நகையாடத் தொடங்கினர். அமெரிக்காவைவிடத் தங்களை, மிகப் பெரும் ஜனநாயகவாதிகளாகக்காட்ட முற்பட்டனர். உலகுக்கு அறிவுரை கூற அமெரிக்கா தகுதியற்றது எனக் கூறி தங்களது இனவாத அட்டூழியங்களுக்கு நியாயப்பாடுகளைத் தேட முற்பட்டனர்.

இன்று இவர்களுக்கு, நெற்றியில் செருப்பால் அடித்ததைப் போல் அமெரிக்க ஜனநாயக அமைப்பு நிமிர்ந்து நிற்கின்றது. நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதித்துறை, ஊடகத்துறை ஆகியவை ஒன்றை ஒன்று, திருத்தி, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருமே தவிர, இலங்கையை போல் கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடிக்காது என அமெரிக்கா நிரூபித்து விட்டது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பான எங்களது கருத்து முரண்பாடுகள் அப்படியே இருக்க, அமெரிக்காவின் இந்த உள் நாட்டு ஜனநாயக வெற்றியை நாம் பாராட்டுகின்றோம்.

இப்போது இந்த இடைக்காலத்தில், அமெரிக்காவை விமர்சித்த இலங்கை இனவாத வீரர்களைத் தேடுகின்றோம். அவர்களைக் காணவில்லை. -என்றார்.

# மேலும் 13 பேருக்குத் தொற்று; வவுனியா நகர் கொத்தணி 272

வவுனியா நகர் கொத்தணியில் மேலும் 13 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று பரம்பலின் தொடர்ச்சியாக வவுனியா நகர வர்த்தகர்களிடையே பெருமளவில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இந்தப் பின்னணியில் உருவாகிய வவுனியா நகர் கொத்தணியில் தொற்று உறுதி செய்யப்படுபவர்களுடன் தொடர்புடையவர்கள் இனங்காணப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களில் ஒரு தொகுதியினரது பரிசோதனை முடிவுகள் இன்று மாலை வெளிவந்துள்ளது.

அதனடிப்படையில் வவுனியா நகர் கொத்தணியில் மேலும் 13 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த நான்கு பேருக்கும், தோணிக்கல் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கும், வவுனியா நகர வர்த்தக நிலைய ஊழியர்கள் எட்டுப் பேருக்கும் இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து வவுனியா நகர் கொத்தணியில் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 272 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்குமுன் வழங்கிய பிரதமரின் வாக்குறுதி என்னானது?




அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்கு முன்பாக நின்று தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபா பெற்றுத்தருவதாக உறுதியளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வாக்குறுதி என்னானது என ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

மேலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த மாதம் இறுதியிலாவது ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவு கிடைக்குமா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவு விடயத்தில், இந்த நாடாளுமன்றத்தில் 2020 பெப்ரவரி மாதம், 27/2 இன்கீழ் கேள்வி கேட்ட வேளையில் 2020 மார்ச் மாதத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என பிரதமரும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரும் வாக்குறுதி வழங்கினர்.

தோட்ட கம்பனிகளின் அனுமதி இருந்தாலும் இல்லாது போனாலும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆயிரம் ரூபா கிடைக்கும் என பிரதமர் வாக்குறுதி வழங்கினார்.

எமது நாட்டில் சம்பிரதாயம் ஒன்றும் உள்ளது என்னவெனின் பிணத்துக்கு முன்னாள் வாக்குறுதி ஒன்றை வழங்குவது சத்தியபிரமாணம் செய்வதற்கு சமமானது.

அவ்வாறே அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்கு முன்னாள் நின்றுகொண்டு பிரதமர் மக்களுக்கு சத்தியம் செய்தார்.

தொண்டமான் என்னை இறுதியாகச் சந்தித்த வேளையில் ஆயிரம் ரூபா குறித்தே பேசினார் எனவும் பிரதமர் கூறினார். அதன் பின்னரும் பல்வேறு வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன.

ஆனால், இன்றுவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் பொய்யான வாக்குறுதிகளாகவே மாற்றப்பட்டு வருகின்றன.

இந்த மாதம் இறுதியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்குமா என அரசாங்கத்தை கேட்கிறேன். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய மூவரடங்கிய ஆணைக்குழு

## ஜனாதிபதி கோட்டாபயவால் நியமனம்

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், பொறுப்புக்கூறல் விடயங்கள் குறித்தும் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீண்டும் பரிசீலிப்பதற்கான மூவரடங்கிய ஆணைக்குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் எச்.எம்.எம் நவாஸ் தலைமையில், ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி ஆகியோர் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கை மாற்று நடவடிக்கைகளைக் கையாள்வதற்குத் தீர்மானித்துள்ள நிலையிலேயே இந்த ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி முதல் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் இந்த ஆணைக்குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்ததுடன், அது தொடர்பாக அமைச் சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்கான உறுப்பினர்கள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆணைக்குழுவினர் கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் அறிக்கை, காணாமல் போனோர் தொடர்பாக ஆராயவென அமைக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு அறிக்கை உள்ளிட்ட கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராயவுள்ளனர்.

அதன்படி அடுத்து கூடவுள்ள ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் இவர்கள் தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளனர்.

அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஜெனிவாவில் இலங்கை சார்பில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை தயாரிக் கப்படவுள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக மூவரடங்கிய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதி எச்.எம்.எம். நவாஸ் தலைமையில் கடந்த 20 ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் குறித்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கை தொடர் பாக விசாரணை மேற்கொள்வதற்காகவே ஜனாதிபதியால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து அதனை எவ்வாறு கையாள்வது தொடர்பிலான பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஓய்வு பெற்ற மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி ஆகியோர் விசாரணை ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் நேற்று வெள்ளிக்கிழமை விளக்கமறியலில்!

வவுனியா நீதிமன்றால் பிடிஆணை பிறப்பிக்கப்பட்டிருந்த வெடுக்குநாறிமலை ஆதி இலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினர் நேற்று ஆஜராகிய நிலையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களமும்,நெடுங்கேணி பொலிஸாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்தமையுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு வவுனியா நீதிமன்றில் கடந்தவருடம் ஒக்டோபர் மாதம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.நிர்வாகத்தினர் பிணையில் விடுவிக்கப்பட்டமையுடன் நவம்பர் 6 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. கடந்த நவம்பர் 6 ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர் நீதி மன்றில் மீண்டும் ஆஜராகிய நிலையில் கொவிட் – 19 அச்சுறுத்தல் காரணமாக அனேகமான வழக்குகள் விசாரணைகளிற்கு அழைக்கப்படாமல் தவணையிடப்பட்டிருந்தன. அந்த வகையில் 2021 ஆம் வருடம் ஜனவரி மாதத்திற்கு வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் வழக்கினை முன்னமே அழைக்குமாறு தொல்பொருட்திணைக்களம் சார்பாக ஆஜராகிய சட்டதரணிகளால் நீதி மன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டது.

எனினும் வழக்கின் திகதி மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக நெடுங்கேணி பொலிஸார் தமக்கு தெரியப்படுத்தவில்லை என்று தெரிவித்த ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றிற்கு சமுகமளித்திருக்கவில்லை. அன்றைய தினம் அவர்களது பிணையும் ரத்தாகியிருந்தது.இதனால் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நீதி மன்றால் பிடிஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்றையதினம் வழக்கு தவணைக்காக ஆஜராகிய ஆலயத்தின் நிர்வாகத்தினர் மற்றும் பூசகர் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## குருந்தூர்மலை விவகாரம்:

# நீதிமன்றை அவமதித்தோருக்கு அரசாங்கத்தின் பதில் என்ன?

## சரவணபவன் காட்டம்



நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த சட்டம், குருந்தூர் மலை விவகாரத்தில் நீதிமன்றின் உத்தரவை மீறி அடிக்கல் நாட்டியவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கேள்வியெழுப்பியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் –

1932 ஆம் ஆண்டு வர்த்தமானியில் குருந்தூர் மலைப் பகுதியில் 'குருந்தசேவ' விகாரை இருந்தது என்று இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கூறியிருக்கின்றார்.

ஆனால் அங்கு சோழர்கள் காலத்தில் சிவன்கோயில் அமைந்திருந்ததாக அந்த மக்களிடையே நிலவி வரும் பாரம்பரியமான கதைகள் தெரிவிக்கின்றன. அதற்குச் சான்றாக மலையின் உச்சிப் பகுதியில் கருங்கல் தூண்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன.

விகாரைகள் கருங்கற் தூண்களால் அமைக்கப்படுவதில்லை என்பதால் அங்கு விகாரை அமைந்திருக்கச் சாத்தியமில்லை.

குருந்தூர்மலை தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கில், அங்குள்ள மக்கள் வழிபாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் எந்தவொரு தரப்பும் புதிய கட்டுமானங்களை மேற்கொள்ளக்கூடாதெனவும் கட்டளையிடப்பட்டிருந்தது.

ஆனால் சூலம் பிடுங்கி எறியப்பட்டது. அவர்களின் வழிபாட்டுரிமைக்கு குந்தகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய கட்டுமானத்தை அமைக்க அடிக்கல்லும் நடப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் தலைமையில் தொல்பொருள் திணைக்களம் நீதிமன்றக் கட்டளையை மீறியுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ரஞ்சன் ராமநாயக்காவுக்கு நான்கு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த சட்டம், இந்த விடயத்தில் நீதிமன்ற அவமதிப்புக்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதுதான் இப்போது மக்களிடம் எழும் கேள்வியாகும்.

1980 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் தண்ணிமுறிப்பு, குமுழமுனை ஆகிய பிரதேசங்களில் மணற்கிண்டி, பதவியா பகுதிகளிலுள்ள சிங்களக் கூலியாள்கள் வந்து வாடி போட்டுத் தங்கியிருந்து அறு வடை வேலைகளைச் செய்வதுண்டு.

அவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் காலப்பகுதியில் வழிபடுவதற்கு மலையடிவாரத்திலிருந்த ஓர் அரசமரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்தனர்.

போராட்டம் ஆரம்பமான பின்பு சிங்களவர்கள் அங்கு வருவதுமில்லை. புத்தர் சிலையும் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டது. ஆனால் அந்தப் பிரதேசத் தமிழ் மக்கள் கால்நடைகளின் காவற்தெய்வம் எனக் கருதப்படும் ஐயனாரை அந்த இடத்தில் வைத்து பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே வெடுக்குநாறி லிங்கேஸ்வரர் ஆலயம், செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயில் என்று மேற்கொள்ளப்படும் இந்து வழிபாட்டிடங்களை பௌத்தமயப்படும் ஆக்கிரமிப்பின் அடுத்த நடவடிக்கையாகவே குருந்தூர் மலைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது ஒரு பகுதி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றளவில் அடக்கிவிட முடியாது. இது தமிழ் மக்களின் பாரம்பரிய வழிபாட்டுரிமைக்கும் மத சுதந்திரத்துக்கும் விடுக்கப்பட்ட சவாலாகும்.

இந்த அநீதியைத் தடுத்து நிறுத்த கட்சி, மத பேதங்களைக் கடந்து அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் ஓரணியில் திரளுமாறு அழைக்கின்றோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 21 நாள்களில் 12,615 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

## கொழும்பில் மட்டும் 3,543 பேர் பாதிப்பு

இலங்கையில் கடந்துள்ள 21 நாள்களில் மாத்திரம் 12 ஆயிரத்து 615 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 543 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 440 பேருக்கும், கண்டி மாவட்டத்தில் 960 பேருக்கும் வைரஸ் பரவியுள்ளது.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் 114 பேருக்கும், பதுளையில் 22 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

அதேவேளை, கடந்த நவம்பரில் 17 ஆயிரத்து 472 பேருக்கும், டிசம்பரில் 18 ஆயிரத்து 838 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நிலாவரையில் தொல்லியல் திணைக்கள அகழ்வு தவிசாளரின் தலையீட்டால் இடைநிறுத்தப்பட்டது



புத்தூர் நிலாவரையில் கிணறு அமைந்துள்ள வளாகத்தில் இரகசியமான முறையில் தொல்லியல் திணைக்களத்தினரால் அகழ்வு ஆராய்ச்சி எனக் கூறிக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பிரதேச சபைத் தவிசாளர் தலைமையிலானவர்கள் சென்றமையை அடுத்து பிசுபிசுத்துள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு பிரதேச சபையில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, நிலாவரை கிணற்றுப் பகுதியில் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் கட்டட அத்திபாரம் வெட்டுவதைப் போன்று வெட்டி வருகின்றனர் என்ற தகவல் தவிசாளர் தியாகராஜா நிரோஷிற்குக் கிடைத்துள்ளது. இந்நிலையில் அவைக் கூட்டத்தை தவிசாளர் சடுதியாக முடிவுறுத்திவிட்டு சபையினரையும் அழைத்துக்கொண்டு நிலாவரை கிணற்றுப் பகுதிக்குச் சென்றார்.

அச் சமயத்தில் நிலாவரை கிணற்றுப் பகுதியில் இராணுவத்தினர் பலர் இருந்தனர். தவிசாளர் உறுப்பினர்களுடன் வருவதை கண்டதும் இராணுவத்தினர் வளாகத்தில் இருந்து வெளியேறிச்சென்றனர். இந்நிலையில் தவிசாளர், அங்கு நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தவர்களிடத்தில் 'நீங்கள் யார்? என்ன செய்கின்றீர்கள்?' என்று வினவினார். அதற்கு அங்கு நின்ற அதிகாரி ஒருவர் தான் தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் நளின் வீரசிங்க, நாம் பணிகளில் ஈடுபடுகின்றோம் என்றார், தவிசாளர் 'இங்கே எதாவது புதிய கட்டடங்களை அமைக்கவா முயற்சிக்கின்றீர்கள்?' என்று கேட்டுவிட்டு, நிலத்தை வெட்டிக் கொண்டிருந்தவர்கள் முழுமையாக சிங்களவர்களாக இருந்தபோது தவிசாளார் தான் வரலாறு சார்ந்த விடயங்களாக இருப்பதால் தன்னால் தமிழில் தான் தொடர்ந்து உரையாட முடியும் என்றார்.

அப்போது அங்கு நின்ற ஒருவரை இவர் தமிழர் தான் என தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரி சுட்டிக்காட்டினர். ஆனால் அவரும் உரியவாறு தமிழைப்பேசவில்லை. இந்நிலையில் தவிசாளர் 'நாட்டில் தொல்லியல் திணைக்களத்தின் பணிகள் ஆக்கிரமிப்புப் பணிகளாகவே அமைகின்றன. அதுதான் எமக்கு சந்தேகமாகவுள்ளது. எமது மக்கள் இன நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் இங்கு பௌத்த கட்டுமானம் அல்லது வரலாற்று மோசடி நடக்கப் போவதாக எனக்கு அறிவித்துள்ளனர். இந்தப் பகுதியை பிரதேச சபை தான் பங்காளராக முகாமை செய்கின்றது. சுற்றுலா வலயமாக கேள்விக் கோரல் செய்வதும் நாம் தான். எமக்குத் தெரியாமல் என்ன செய்யப்போகின்றீர்கள்? நான் தவிசாளராக அவதானிப்பைச் செலுத்த வேண்டியுள்ளது' என்றார். இதனையடுத்து மீளவும் தோண்டப்பட்ட குழியில் கணிசமான பகுதி மூடப்பட்டது.

பின்னர் அங்கு வந்திருந்தவர்கள் குறித்த பகுதியில் காணப்பட்ட சிறு சிறு புட்களை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து தவிசாளரிடம் ஏதாவது பிரச்சினையா என்று கேட்டனர். தவிசாளர் 'நாம் எமது கடமையை ஆற்றுகின்றோம்' எனக் கூறிவிட்டு நிற்க, மதிய போசனத்தை தொல்லியல் திணைக்களத்தினர் ஆரம்பித்திருந்தனர்.

இந் நிலையில், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மற்றும் அதன் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கே.சுகாஷ் உள்ளிட்ட மேலும் பல செயற்பாட்டாளர்களும் அந்த இடத்துக்கு வருகை தந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். பின்னர் ஊடகங்களும் வருகை தர தொல்லியல் திணைக்களத்தினர் எடுத்து வந்திருந்த மண் வெட்டிகள், தள்ளுவண்டி போன்றவற்றை பிக்கப்பில் ஏற்றி அனுப்பினர். பின்னர் 3 மணியாளவில் வந்திருந்த உத்தியோகத்தர்களையும் குறித்த பிக்கப் வாகனம் வந்து ஏற்றிச் சென்றது.

இந்நிலையில் சம்பவ இடத்தில் காத்திருந்த தவிசாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்கள் நிலாவரைக் கிணறு அமைந்துள்ள வளாகத்தில் இருந்து வெளியேறினர்.

CNR world wide Express
Courier & Cargo
International Courier & Cargo Service.
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி.
அனுப்பும் பொதிகளை இணையத் தளத்தில் கண்காணிக்கும் வசதி.
இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062



கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1987.08.01 | பிறந்த திகதி - 1987.11.20 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - சித்திரை 4 | நட்சத்திரம் - மிருகசீரிடம் 4 |
| சூ/செவ் - 5 இல் | செவ் - 7 இல் |
| பாவம் - 22 1/2 | பாவம் - 38 1/2 |
| கல்வி - A/L | கல்வி - பிரான்ஸ் படிப்பு |
| தொழில் - மோட்டார் சைக்கிள் பாட்ஸ் கடை சொந்த தொழில் | தொழில் - பிரான்ஸ் PR அரசாங்க வேலை. |
| எதிர்பார்ப்பு - படித்த பெண் தேவை | எதிர்பார்ப்பு - சுவிஸ், பிரான்ஸ் ஜேர்மன் மணமகன் தேவை. |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி, பருத்தித்துறை பிரதான வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528



Anna EXPRESS Courier Services
அண்ணா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு |




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2021 இல் வெளியிடப்பெற்றது.